[illegible]

தைலச் சுருக்கம் - ௫

மனமகிழ்ந்து செப்புகிறேன் புலத்தியனே மைந்தா
மகிமையுள்ள தைலத்தின் மார்க்கங் கேளு
கனமுடனே வெள்ளெண்ணெய் படியும் வாங்கு
காரெள்ளுடன் பால்படியு மாகு மாகும்
இனமுடனே செவ்விளநீர் படியும் சேரு
இயல்புடனே படிசாறு பிரசைந்து வாங்கு
தனதான சீரகமும் சந்தனமு மப்பா
தனஞ்சியனே மனமுடனே சாமமொரான் கட்டே
(௧)

கூட்டவே பச்சிலை கிச்சிலிக் கிழங்கு
கனமாக திருச்சக்கு பலமே மஞ்ச
கிட்டவே கவுவத்தி விட்டு நீயும்
கின்வாத மைபோலே ஆட்டு மைந்தா
கூட்டவே எண்ணெயுடன் பாலுஞ் சாறும்
கூசாமல் சரக்கையுமே குழப்பக் கொண்டு
நாட்டமாய் பாண்டத்தில் இட்டு மைந்தா
நலிம்பாமல் தீயெரிப்பாய் சாற்றி னேனே.
(௨)

சாற்றவே மெலிந்தபத மாகும் போது
சட்டமுடன் மருப்பாண்ட மிருத்துக் கொள்ளு
போற்றவே பித்தபலம் மிகுதி வந்தால்
பொல்லாத வுரைசனி புலம்பர போகும்
தோற்றியதோர் மேகமென்ற பிணிபத் தொன்று
துடராது காலைவிவ செவியின் குத்தல்
காத்துமே காதுடன் சந்திரா உதம்
கேதறியே ஓடுமடா சொறியும் போமே
(௩)

—

போமேதான் கண்ரோகம் படர்மே சுங்கள்
போகாத சீக்கித்தல் புகைச்சல் போகும்
தாமேதான் மயக்கமென்ற தெல்லாந் தீரும்
தளருமே கெற்பத்தின் சூடு போகும்
ஊருமேனி தளராது மேனி யெல்லாம்
வாய்திட்டு அலறுமடா வந்த ரோகம்
கோபமதான் குருவிற்கண்ட குற்றம் போகும்
கைசாற்றவே சுள்ளிப்பூக் கிரந்தி போமே
(௪)

போமடா கர்மமென்ற பீடை போகும்
புண்ணியனே பத்தவா தங்கள் போகம்
ஆமடா புலத்தியனே பதித வாதங்கள்
அறிவுடனே குணங்குறிகள் அறிவாய்ப் பார்த்து
ஊமடா அதுகளுக்குப் பூசை செய்து
வழங்குவாய் தைலமதை வழங்கி வாய்த்தி
பேமடா குருபதத்தைப் போற்றி செய்
மெய்யுடனே யென்னாளும் வாழ்கி வாழ்வே (ரு)

முற்றிற்றும்

சஞ்சீவி எண்ணெய்

பூரணமாய்ச் செப்புகிறேன் புலத்தியா கேள்
புகழ்பெரிய நாதாக்கள் பாதம் போற்றி
காரணமாய் மேகத்துக் கெண்ணெய் கேளு
கருதுகிறேன் கடுக்காய் மஞ்சி சுக்கு
சீரணமாஞ் சீரகமும் நிலவேம்புப் பட்டை
சிறந்ததொரு பறங்கிச் சக்கை மிளகுமாகும்
தாரணியில் வெந்தயமும் செவ்வி மிளகு
தப்பாமல் கோஷ்டமுடன் கத்திரியுஞ் சே
(க)

சேரேநீ தினுசுக்கில் பலமொன்று வாங்கு
சித்தண்ட வெண்ணெய்ப்படி யென்று கேளு
காரேநீ காராவின் பால்படியு மாகும்
கற்றாழைச் சாறுபடி கலந்து வாரு
சீரேநீ செவ்வல்லிச் சாறுபடி கலந்துவாரு
சிறந்ததொரு பரங்கிச்சக்கை பலமுமாகும்
தாரணியில் வெந்தயமும் நெல்லி முள்ளி
தப்பாமல் கோஷ்டமுட னதிமதுரஞ் சேரே
(௨)

கொள்ளவே யெண்ணெயுடன் குழப்பிக் கொண்டு
கிணறுடனே பேர்கண்ட பாலுஞ்சாறுங்
தள்ளாமற் சட்டியிட்டு அடுப்பேத்திக் கொண்டு
தயவுடனே தீயெரித்துச் சுண்டக் காய்ச்சு
மெள்ளவே மெழுகுபத மாகும் போது
மேனியுட னிறுத்துவிடு மெய்தான் சொன்னேன்
கள்ளமன தில்லாமல். வடிகெணுக்கு
கருத்துடனே பூசிப்பாய் கருது வாயே
(௩)

கருதாவாய் வச்சிரவிக் கிரண்டு யப்பா
கண்மணியே காதையிலே யிருக்கரண்டு கொண்டு
மருந்துவா யப்படியே மண்டலமே கொண்டால்
மயங்குமடா மேகமென்ற இருபத் தொன்றும்
பெரும்பாடு சூட்டுடன் உபகுறை வாதம்
பறக்குமடா ஓகோகோ டாகு டாகு
இருக்குமென்ற யண்ணம்வந்து ரோக மெல்லாம்
அயன்சொல்வேன் யேகுமடா யின்னங் கேளே
(௪)

கேளப்பா பத்தியமே புளிபுகையு மாகா
கொடியான போகமுடன் கடுகுநல் லெண்ணெ யாகா
தூளப்பா பூசணிக்கா யகத்தி. கொள்ளு
அந்தரமே பூவரசும் புகழ்வை தான்
வாளப்பா உறுதியுடன் கொண்ட பேர்க்கு
நாடாது பீடையென்ற கன்மம் போமே
பாளப்பா அன்றுமுதல் பகரக் கேளு
பத்தியத்தில் நித்தியமாய் சித்தி யாமே
(௫)

முற்றும்.

மேகத்தெண்ணெய்

உண்மையா யுரைக்கிறேன் புலத்தியா கேள்
உலகமதிற் பண்ணுவதற்கு உதவி யாக
உண்மையாய்ச் சர்வ மேகங் களுக்கும்
உளமான இத்தண்ட எண்ணெய் வாங்கு
பண்பாகப் படியொன்று பாலதுவே யாகும்
பருவமாய் வெள்ளறுகு படிசா றும்
தண்மையுடன் குமரிச்சார் படியு மாகும்
நீதியுடனே ஆவின்பால் படியுந் தாக்கே
(௧)

தாக்கவே வல்லாரை சார்படியு மாகிக்
தாளிச்சார் படியதனை வாங்கி மைந்தா
ஆர்க்கவே அத்திப்பால் படியு மாகும்
அதின்கூடப் பூவரசன் பட்டைச் சாறு
காக்கவே சாறுபடி கால தாகும்
கருத்துடனே முள்ளங்கிப் படிசா றும்
மார்க்கமுடன் கோஷ்டமுடன் மதுர மாகும்
மகத்தான சீக்கிரட வகையு மாமே
(௨)

ஆமெனீ திங்களுக்கு சடாமாஞ்சி யாகும்
மாறுமற் சீரகமோ டொக்கச் சேரு
ஆமெனீ வெந்தயமும் திப்பிலியு மாகும்
அனீபாக பறங்கிச் சக்கை ரோகணியு மப்பா
தாமெனீ வால்மிளகு கடுக்காய்ப் பிஞ்சு
தயங்காமற். இருநேக்தி கூட வாங்கு
தாமெனீ திருசக்தி ஓர்பலமுங் கூட்டு
தானதிலே யாவையுடன் பலமும் வாங்கே (௩)

வாங்கியே கருவமதில் யிளாகிறாய்க் கேளு
வைமாந்தனை யதிற்போட்டு மைபோ லாட்டு
பாங்கென்ற மேற்கண்ட பாலுஞ் சாறும்
பாந்தமிட வெண்ணையுமே யொன்றாய்ச் சேர்த்து
சாங்கமாய் விந்தையெல்லாம் மதற்கு மேப்பு
சட்டமாய்ப் பாண்டத்தி லிட்டு மெந்தா
சேங்குடன் தீயெரிக்க சுந்தரனே கேளு
சொற்பெரிய வெண்ணெய்பத மாகுந் தானே (௪)

தானென்ற மறுபாண்ட மறுத்துக் கொள்ளு
தப்பாமல் நாளொன்று கார்க ரண்டு
காணென்ற காரியமே உள்ளுக்கு கொள்ளு
கண்மணியே கரும்பத் தியங்களப்பா
பானென்ற உப்புமுதல் பதார்த்தங் தள்ளி
பாங்காக வறுத்ததொரு துவரை யாகும்
வேனென்ற வியாதியெல்லாம் விரண்டு போகும்
விருப்பமுடன் பண்டிதர்க்கு விளம்பு வோணம்
(ரு)

குளிர்ச்சி யெண்ணெய் – ரு

பூரணமா யறுமுகவன் பாதம் போற்றி
புலத்தியனே தைலமதை புகல்கிறேன் கேள்
காரணமாய் காரெள்ளு யெண்ணெய் வாங்கி
கற்றுழைச் சாறுபடி யொன்று கேளு
வாரணமா யிளநீரும் படிதா னாகும்
வகையுடனே நெய்ச்சிட்டி படிசா றாகும்
தாரணியில் ஆவாரை படிசா றாகும்
ததியுடனே காணிச்சாற் படியும் வாங்கே

வாங்கியே ஆவின்பால் படியு மாகும்
வாங்கிவாய் சாம்பிராணிப் பலமி ரண்டாம்
பாங்கமாய் பச்சிலி கிச்சிலிக் கிழங்கு
பண்புடனே மிளகுபலம் பண்பாய்ச் சேரு
சேர்க்கவே கலுவத்தி லிட்டு மைந்தா
தண்மையாம் மைபோலே ஆட்டு வாய்நீ
சாங்கமாய் கண்டதொரு பாலுஞ் சாறும்
தப்பாமல் எண்ணெயுடன் கிளம்பிக் கொள்ளே
(உ)

கொள்ளவே பாண்டத்தில் விட்டு மைந்தா
குணமுடனே அடுப்பேற்றி தீயை மூட்டு
கள்ளமிலா மெழுகுபத மாகுங் கண்டாய்
கசடறவே மறுபாண்ட மிறுத்துக் கொள்ளு
விள்ளவே யெட்டுநாள் இரண்டு வட்டம்
உருப்பமாய் தைலமது மிகுதி வாய்நீ
துள்ளவே பன்னிரண்டு தலைமுழுகி வந்தால்
றுலையுமென்ற உயாதிதனை செப்புவேனே
(ரு)

வேனென்ற பத்தியமும் வைக்க வேண்டாம்
வெகுசுருக்கா யோடுமடா மேக மெல்லாம்
மானென்ற மயக்கமொடு பித்தம் போகும்
மாறுமே தலைக்கித்தல் கண்ணெரிச்சல்
கோனென்ற ரணங்களொடு சொறியும் போகும்
~~ஏனென்ற கரப்பன்முதல் லெரிவு காந்தல்~~
கூறுகெட்ட படர்மேகங் கிரந்தி யேகும்
ஏனென்ற கரப்பன்முதல் லெரிவு காந்தல்
பிறக்காது வியாதியெல்லாம் ஏகுந் தானே
(சு)

ஏகமாய்த் தைலமதை முழுகி வோர்க்கு
எவ்வர்ணம் பொன்மேனி பொன்வர்ண மாகும்
போகமே யதிகமடா பலமுண் டாகும்
புண்ணியனே நேத்திரத்தின் கித்தல் போகும்
சோகமாஞ் செவிநோயுந் தீரப் போகும்
இரப்பாக வசிகரமும் செயலு முண்டாம்
நாகமாய்ப் பண்டிதர்க்குத் தயவு கூர்ந்து
தர்மமாய் உரைத்திட்டேன் தானு மிறே
முற்றிற்று (ரு)

மேகத் தெண்ணெய்

எண்ணெய்கேள் முளைகருணை வெள்ளை சாரணைவேர்
பதமான நந்திரிவேர் முருங்கை வேம்பு
தன்னவே குமரியொடு வள்ளி சீந்தி
சலந்திரட்டிக் கரிசாலை பொன்னாங் காணி
உன்னவே அமுக்குரா சங்கங் குப்பி
வெள்ளின்று நீர்ப்பூலா உகுதி யோடு
தின்னமாம் நிலப்பனைவேர் அழிஞ்சிப் பட்டை
திருவிளா வெள்ளறுகு வல்லாரை யாமே
(௧)

ஆவாரை முடக்கத்தான் அகத்தி யோடு
அப்பனே வகைக்கிப் பலந்தா னிரண்டு
ஆரையாம் ஆவாரைச் சமூலங் கொண்டு
அழகாக நிறுத்திடுவாய் பலமோ பத்து
சேரவே ஒன்றாக இடித்து நன்றாய்
சேர்த்துவிடு தாழியிலே ஜலந்தான் கேளு
வேரையாம் சீரகம் பலந்தா னெட்டு
வெந்தயமோ பலந்தானு மெட்டு போடே
(௨)

போக்கோடே அவைநன்றாய்க் கரைத்துக் கொண்டு
போட்டுநீ பதினறுபடி ஜலந்தான் வாரு
ஆட்டியே அடுப்பேற்றி ஆறப் போடு
அழகான கியாழந்தான் குறைவு கண்டு
தீட்டியே கியாழமுந்தான் குறைந்து தானால்
சித்தண்ட எண்ணெய்படி இரண்டு வாரு
காட்டியே யீருள்ளிச் சார்படி யிரண்டுவாரு
காராவின்பால் படியிரண்டு கல்ஞ ரெட்டே
(௫)

எட்டான கல்ஞரு வஸ்திர காயம்
யிதமாகச் செய்ததிலே போடு போடு
மட்டான ராயபுரிச் சர்க்கரைதானெட்டு
வாகாகப் போட்டதிலே காச்சு காச்சு
இஷ்டமாம் மாலோடு கியாழம் வற்ற
யெண்ணெயதை மெழுகுபத மாகக் கிண்டி
தட்டியே கரகத்தோ டிறக்கி யாற்றி
சாடியிட்டு மூடிதானியப்புடமே வையே
(௬)

வைத்துமே பச்சமொன்று கழித்து வாங்கி
மைந்தனே நாளொன்றுக் கோர்க ரண்டி
உற்றுமே தினந்தோறுங் கொண்டா யானல்
ஓடுகிற நோயைநீ உற்றுக் கேளு
மைத்ததொடு மேகங்க ளிரண்டு பத்து
மேலான கிரந்தியரை யாப்பு கிரட்டம்
கத்ததொடு அஸ்திசுரம் அஸ்தி வெட்டை
கரப்பனொடு சிரங்கொசொரி மேகம் போமே. (௫)

மேகமொடு நல்வகையாம் பிரமி யங்கள்
வெண்கிரட்டம் படர்தாமரை மேக ஊறல்
மேகமதாய் பித்தவாய்வு உஷ்ண வாய்வு
மெய்யெரிவு காலெரிவு காந்தல் போகும்
மேகமாம் வாய்வோடு அண்ட வாதம்
மெல்லியர்க்குங் கெர்ப்பநோய் யேகுந் தீரும்
மேகமாம் மலடிக்கிப் பிள்ளை யுண்டாம்
மேலான வயித்தியரே விரைந்து பாரே.

(௬)

பாரேநீ யெண்ணெய்க்கி பத்தியமோ யில்லை
பரிவான பெரியோர்க்குஞ் சிறியோர்க்கு மாகும்
பாரேநீ புவிமீதில் மானி டர்க்கு
பாங்குடனே வியாதிகண்டாற் றிவைப்பி பாகு
பாரேநீ இவர்களுக்கு யெண்ணெ யிவாய்
பாலகனே பொருளதை நீவை யாதே
பாரேநீ புலத்தியனே ஐயா கேளு
பண்டிதங்க ளறிந்துநீ பகர்ந்தி டாயே (எ)

(இது வமது)

சீராகப் புலத்தியனே செப்பக் கேளு
சிவசிவா மேகத்துக் காதி யெண்ணெய்
தாரான சித்தண்ட யெண்ணெய்படி யொன்று
தார்குழலாள் முலைப்பால் அரைப்படியு மாகும்
நேராக கேசரியின் படிநீ ராகும்
நிலைமையா யாவின்பால் படியு மாகும்
கூரான அத்திப்பால் படியு மாகும்
கிணமுடனே சாறுவகை கூறக் கேளே

(அ)

கேளப்பா வழுதிச்சார் படியு மாகும்
கெடியான குமரிச்சார் படியு மாகும்
வாளப்பா வல்லாரை சார்படியு மாகும்
வாங்கிவாய் இளநீரும் படிதா னப்பா
நாளப்பா நன்னாரிச்சார் படியு மாகும்
நறுந்தாளி சாறுபடி அரைதான் கேளு
சூளப்பா குமட்டிச்சார் படியரையு மாகும்
சுந்தரமே சரக்குவகை செப்பு வேனே (௯)

செப்புகிறேன் திரிகடுகு திரிப லாதி
சிறப்பான சீரகமும் கொத்த மல்லி
தொப்பதமாய் கோஷ்டமுட னதிம துரம்
கொண்டதொரு கடுகு ரோகணியுங் கூட்டு (௰)

அப்பனே திருசக்கு அஞ்சுபலமுஞ் சேரு
அன்பாக வாளமிகு பலந்தான் வாங்கே
வாங்கியே யிளநீரால் மைபோ லாட்டி
வகையுடனே மேற்கண்ட பாலுஞ் சாறும்
பாங்கமா யெண்ணெயுமே சேர வார்த்து
பாலகனே மகிழ்ந்தையெல்லாங் குழப்பிக் கொண்டு
சிங்காரப் பாண்டத்தில் விட்டு மைந்தா
சிவசிவா அடுப்பேற்றி யெரிப்பாய் தானே.
(௰௧)

தானென்ற மறுபாண்ட மிருத்துக் கொண்டு
தன்மையாய் தினமுச்சிக் கிரண்டு தானும்
வேனென்ற காலியிலே அள்ளுக்குக் கொள்ளு
இரண்டோடே நாலுபத்து நாள தாகும்
கானென்ற புளிபுகையுந் தள்ளு தள்ளு
கடினமாய் போகத்தை நினைந்தி டாதே
பானென்ற பத்தியமோ மிச்சா பத்தியம்
பரிவாகும் வியாதிதனை பகரு வேணும்.
(௪௨)

பகருவேன் குருமேக கருங்கிரந் டங்கள்
பாண்டுடனே வாதமென்ற பக்க சூலை
வேகமென்ற மூத்தமுடன் வாய்வு போகும்
வெகுசுக்கு படர்மேகஞ் சிரங்கு போகும்
வானென்ற உஷ்ணமும் மற்றும் போகும்
அப்பனே கெர்ப்ப நோய் எல்லாம் தீரும்
போமென்ற காமாலை எலும்பு நீக்கி
சுத்தமாய் பார்க்குமடா குன்மம் போமே
(௪௩)

போமேதான் கூறுகெட்ட வியாதி யெல்லாம்
பொல்லாத சன்னிவகை போகும் போகும்
நாமேநீ இணங்கிறிகள் தான றிந்து
தாரணியிற் பண்டிதங்கள் செய்ய வேணும்
வேதனங்கள் செய்யாமல் முன்பின் னாக
விருப்பமாய் அவிழ்தங்க ளீய வேணும்
மாமதங்கள் பொழியுமப்பா மருந்து சொன்னேன்
மன்மதன் போ லழகுண்டு மாபலமுண்டு
ஆமேதான் புலத்தியனே அறிவாய்ச் சொன்னேன்
அகண்ட பரிபூரணமா யருளு வோமே (யச)

முற்றிற்று

விஷ்ணு சக்கரம் - முக்குவிஷநெந்தம்

ஆதிவிந்து சாதிலிங்க மானதொரு நாபியும்
சோதி மூலாதாரங் துலங்குகாந்த மிதனுடன்
நீதிகுப்பச் சாறுவிட்டு நேரெங்கின்றி நேரரை
பாதிமேனி யாயிருந்த பாரளந்தோன் சக்கிரம்
சக்கரத்தி லோர்மணி தனித்திடு கடுகுடன்
மிக்கதேனு மிஞ்சிஞ்சிம் விட்டரை யுரைத்திடப்
பக்கசூல மிக்கவாயுப் பதின்மூன்று சன்னியும்
மிக்ககோப மானதும் தவிப்பதற்கு மில்லையே

ஆதியந்த மிகநிறைந்த தீட்சை மார்க்கம்
அருள்பெற்ற புலத்தியனே சொல்லக் கேளு
சோதியந்தத் துள்ளிருக்கும் சுடரைக் கண்டு
சொதியந்தத் துள்ளிருக்கும் சுடரைக் கண்டு
சொல்லுகிறேன் அகாரமுடன் உகாரம் நோக்கி
வேதியென்ற கமலமதில் பொருளே யாகும்
வேதாந்த முடிந்திடமாம் எட்டிரண்டுஞ்
சாதியென்ற தீட்சையது வறிந்து பாரு
சத்தியந்தா னுந்தனுக்குத் தவறு வாரோம். க.

வாறுகேள் யெட்டுடனே ரெண்டுங் கூட்டல்
வாச்சுதடா உந்தனுக்கு மகிழ்ந்து பாரு
கூறுகேள் அப்பினுட னுப்பும் போச்சு
கொடிதான சுருக்கமது கூறப் போகா
நீறுகேள் நாலுமுகத்தை மேவிப் பாரு
நிச்சதடா தீட்சையது பத்து மாகும்
மாறுகேள் எட்டிரண்டு செபித்தா யானால்
லாட்சரிய உலகமெல்லா மதுக்குள்ளாச்சு
(உ)

ஆச்சென்று பிண்டமது அண்ட மெல்லாம்
ஆச்சரியங் கண்மணியே யென்ன சொல்வேன்
வாச்சென்ற அண்டத்தை நோக்கிப் பாரு
வாருதிபோல் ரஹமதியுந் தோணுந் தோணும்
நீச்சென்ற திருநிஹ்டைக் குள்ளே புக்கில்
நிஜச்சுதடா காயமதில் ரூப மில்லை
போச்சென்ற வாயுவெல்லாந் தாதிற் புக்கில்
அடங்கிற்று பார்த்துக்கொள் ளுண்மை தானே
(ந)

தானென்ற இம்முறைமை அறியாச் சித்தர்
தப்பென்பார் அசடரையுந் தள்ளு தள்ளு
கோனென்றல் வலமோதான் குஹந்து பாரு
கூறவொண்ணு இக்கருவை பேச லாகா
வானென்ற பெரியோரைக் கண்டு தேறு
வணங்கியே யனுதினமு மகிழ்ச்சி யாக
பானென்ற இப்பொருளை எசன் தானுடமே
பார்பரிக்கித் தானுரைத்தார் பரீட்சை யென்றே
(சு)

என்றெனவே பொருளதுதான் ரவியே புக்கு
மெஞ்ஞத்துரைக்கப் போகாது யென்ன சொல்வேன்
நன்றெனவே வகையையந்து பாட்டுக்குள்ளே
நன்றாகத் தோணவே சொல்லி வைத்தேன்
யென்னை பொருளறிதா னுற்றுப் பாரு
ஓகோகோ யென்ன சொல்வே னுகமைமெந்த
இன்றேதான் புதுமைபார் இத்தனைத்தைக் காணு
சிப்பாசயென் றுள்ளுக்குள் அறிந்து பாரே. 5.

முற்றிற்று

சிப்பூசூத்திரம் - ய.

பாரப்பா வாதியென்றால் பூசை வேணும்
பாங்கான சொட்டுவேணும் தியானம் வேணும்
நேரப்பா வாசியென்று யோகம் வேணும்
நேராக வட்டியத்தை நிறுத்த வேணும்
சாரப்பா சாத்திரங் கூத்திர மிரண்டுஞ்
சார்வாகப் பார்த்திருந்து வாதம் பாரே.

கு

பாரப்பா வாதத்தின் லட்சங் காப்பு
பாடினேன் அதைச்சுருக்கி மெய்நூ/றக்கில்
ஆரப்பா வழங்கி உறுதி மார்க்கம்
அடைவாகச் சொல்லிவிட்டேன் செப்பு வைத்தான்
நேரப்பா முன்னூற்றில் அடக்கி விட்டேன்
நேர்மையாய் வெண்புவிலே நிசமாய்ப் பாரு
ஆரப்பா அதிலடக்கம் பதிநூ/றுக்கின்
ஆச்சரியம் பதின்மூன்றும் பத்தும் பாரே. ௨

—

பாரப்பா அங்கங்கே சொன்ன தெல்லாம்.
பரிவாகக் கண்டறிந்து படிக்க வேணும்
தீரப்பா கருக்கிடையுங் குறுக்கிடையுங் கண்டு
திறமாகச் செய்தாக்கால் செப்பு வாகும்
ஆரப்பா பின்னும் போற் சொல்லப் போறேன்
ஆச்சரிய மனிதருக்கு நோய்கள் தீர
மேரப்பா அண்டோட்டை சத்தி செய்ய
மேதினியிற் கற்சுண்ண முவரும் கூட்டே
(௩)

—

கூட்டியே அமுரியுடன் கலந்து கொண்டு
குமுறவே காச்சிறதை அத்தியாச்சு
ஆட்டியே பழகினொடு உப்புங் கூட்டி
அழகாகக் காரமுடன் சாரங் கூட்டு
நீட்டியே வீரமுடன் வெள்ளி கூட்டி
நேராகச் சரிபிடையாய்க் கூட்டிக் கொண்டு
காட்டியே கல்வத்தி லிட்டு ஆட்ட
கலங்காதே வெள்ளைக்கும் பாலு வாகு.

ரு

வார்த்துநீ அரைத்திடுவாய் மைபோ லாக்கி
வைக்கவே வில்லிசெய்து காயப் போடு
கோர்த்துநீ ஓட்டில்வைத்து ஓடு மூடி
குமுறவே கெசபுடத்தில் நீறிப் போகும்
பார்த்துநீ திராவகம் விட்டு ஆட்டு
பதையாமல் வில்லிசெய்து ரவியிற் போட்டு
சாத்துநீ ஓட்டில்வைத்து ஓடு மூடி
~~குமுறவே கெசபுடத்தில் நீறிப் போகும்~~
சதிராக முன்போல புடத்தைப் போடே

போடப்பா சோடசத்தின் குருவு மாச்சு
பொல்லாத புள்ளிகட்குச் சொல்ல வேண்டாம்
ஆடப்பா அண்டத்திற் சாரங் கூட்டிமல்
அப்பனே சலமாகுஞ் சலத்தை விட்டு
தேரப்பா நாகத்தை யுருக்கிச் சாய்க்க
திடமாக நாகமது கட்டிப் போகும்
கேளப்பா செம்பு வெள்ளி களங்கி தானும்
சுகமாக வெட்டி யொன்று தாக்கி தாக்கே.
(௬)

தாக்கியே பார்த்தாக்கால் ஏழுங் காணும்
தயவான வங்கத்தைக் குத்தி ஊது
நோக்கிநீ யிதைக்கொண்டு செலவு செய்து
நுணுக்கமாய் முப்பூவைப் பிராகி டாடு
ஊக்கிலே சோடசந்தான் முப்பூ வாகும்
அல்லாட்டால் முப்பூவின் அமைவு மில்லை
தூக்கியே யிதையெடுத்து வைத்துக் கொண்டு
சுருக்கமுள்ள செயநீரி லெல்லாங் கட்டே
(௭)

கட்டயிலே தனித்தனியே வேதையாகும்
கசடறுக்கும் சொல்லாதே காயம் பாழாம்
நிஷ்டையிலே யிருந்துகொண்டு தியானம் பண்ணு
நினைவதப்பி நீயிருந்தா லெல்லாம் போகும்
கட்டயிலே வாசியுட பூசை வேணும்
கண்மூக்கு மத்தியிலே கருதிப் பாரு
புட்டயிலே தலைகவிழ்ந்து இனிய வேணும்
மூர்க்கமுள்ள பெப்பூவின் முறையைப் பாரே.
(௮)

பார்க்கையிலே சட்டைமுனி மென்றுளப்பா
பரிவாகக் கண்டறிந்து பார்த்துக் கொண்டான்
சேர்க்கையிலே அந்தரமும் திடமாய்க் கண்டான்
செகத்திலுள்ள சித்தர்களும் அப்புறமே கண்டார்
தாக்கையிலே சோடசமாம் செயலிக் கின்றே
தயவான கல்லுப்பினை துவைத்து வாட்டு
தோக்கையிலே திரிகோண சலத்தைக் குத்தி
யுண்மையா யூதிடவே கட்டுப் போமே
(௯)

போமடா கரியோட்டி லூதும் போது
புகமாகக் கண்விட்டு ஆடும் ஆடும்
ஆமடா கல்லுப்பை கட்டி ஊத
நல்ல தொகு வயிரமது போல ஆடும்
நாமடா யானுவத்தால் வெளியில் போட்டேன்
நாட்டாதே மனிதரென்ற கள்ள ருக்கு
தாமடா யிதுவெல்லா மறிந்து கொண்டு
தாரணியில் விள்ளாதே அடக்க மற்றோம். (ய)
முற்றிற்று

சிவ குளிகை — அ.

பாரப்பா சித்தரெல்லாம் சொன்ன மார்க்கம்
பாங்கான வயித்திய ரேயிந்நூல் பாரு
பாரப்பா மாந்தமது பிணிகட் கெல்லாம்
பகருவேன் குளிகையொன்று பண்பாய்க் கேளு
சேரப்பா பதினெட்டு பேருங் கூடி
திறமாகக் கோர்வையாய்ப் பாடினார்கள்
ஆரப்பா வதைக்கிருக்கி யொருகுளிகைக் கின்னே
அப்பனே சிவகன்னியாய்ப் பாடினேமே. (க)

பாடிறேன் ஆதாரென்றன் பொதிகைக் குள்ளே
பரமசிவன் மகனுடைய சீட னப்பா
ஆடியே குளிகையுட கருவைக் கேளு
அப்பனே சுருக்கியே துச்சாய்ச் சொன்னேன்
தேடியே திரியாதே கருமேனி வேரு
ஜெயமரீசி திருநீற்றுப் பச்சை வேரு
வாடியே மயங்காதே சிறுபூளை வேரும்
மைந்தனே வாடாத சிறுபொங்கமி தானே.
(2)

தானென்ற காட்டிலே மொச்சை வேரு
சாதவெள்ளைச் சாரணையின் வேரு தானும்
தேனென்ற செப்புரிய வேலி வேருந்
ஜெயமான அமுக்கலாம் வடக்கி வேரும்
~~மைந்தனே குட்டிவளா மேற்கு வேரும்~~
[illegible]னென்ற குளிமுட்டான் சல்லி வேரும்
மைந்தனே குட்டிவளா மேற்கு வேரும்
வேனென்ற வேருவகை பதினைன்றுகளும்
உள்ளம் புகிறேன் கடைமருந்தில் உபரங்கேளு

கேளடா பெருங்காயம் வசம்பு கூட
 செமையான இந்தரத்தை வெள்ளிப் பூண்டு
ஆளடா திப்பிலி கிராம்பு தானுங்
 மப்பனே சாபத்திரி இஞ்சி தானுங்
சேரடா கடைமருங் திரண்டு பங்கு
 செயமான வேருவக்கை யொன்றையுங் கொள்ளு
வாரடா யிதின்கிருவை யொன்றையுங் கூட்டி
 மாட்டியே கிட்டுவினாச் சாறு வாரே.
(சு)

வார்த்துநீ யரையடா அரைச்சாமந்தான்
 மைந்தனே குளம்பதுபோ லாகு மென்னே
பார்த்துநீ வேலியின்றன் சாறு விட்டுப்
 பாங்காக அரைச்சாம மரைத்துக் கொள்ளு
சேர்த்தியே குன்றிக்கா யளவு செய்து
 திரமாக அங், உங், சிங் மங் வோம் சிவய நமவென்று
போற்றியே யெடுத்தாக்கால் சித்தி யாகும்
 புத்திரனே அஷ்டமா சித்தி யாச்சே (எ)

ஆச்சப்பா குளிகைதான் என்று சொன்னோம்
அப்பனே நூல்களிலே சொல்ல வில்லை
காச்சப்பா குளிகையுடக் கருவைச் சொன்னோம்
காணுமே ஓடுமடா பிணிக ளெல்லாம்
போச்சப்பா, பிணிகள் மிகுப்பாலி விட்டால்
பேரான முப்பத்திரண்டு தோஷம் போகும்
ஆச்சப்பா, மாந்தமொடு பதினென்று போகும்
அப்பனே வலியுட சாற்றில் போகுமே.
(௬)

போமடா முட்டுத்தோஷம் என்ப தக்கும்
புகழான இக்கிகோர் சாற்றி னேரும்.
ஊமடா புள்தோஷம் பதினெட் டுக்கும்
ஊகான வெந்நீரில் ஊட்டாற் போகும்
தாமடா பொதிகைமுனி சொன்ன மார்க்கம்
தப்பாது எந்நாளும் வீண்போ காது
ஆமடா இக்குளிகை யிதுதா னென்று
அப்பனே பார்த்தவர்க்கு சித்தி யாமே.
(௭)

கேளப்பா யெங்களுட குளிகைக் கெல்லாம்
கிருபையாய் நொச்சியிலே சாற்றிலோடும்
வாளப்பா சன்னியொடு யிமை லூக்கு
மைந்தனே வேலியுட சாற்றிற் போகும்
வாளப்பா கரப்பானுக் கெல்லா மைந்தா
வளமான அமுக்கிரா சாற்றிற் போகும்
ஆளப்பா குழந்தைகட்கு வந்த நோய்கள்
அப்பனே யிக்குளிகையி லடக்க லாமே (அ)

முற்றிற்று

எண்	குளிகையின் மருந்துவகை.	நிறையெடை
௧.	குப்பைமேனி வேர்	க
உ.	திருநீற்றுப் பச்சை வேர்	க
௩.	சிறுபூளையின் வேர்	க
௪.	சிறு பொருமி வேர்	க
௫	காட்டுமொச்சை வேர்	க
௬	வெள்ளைக் காக்கண வேர்	க
௭	மேற்சாரணை வேர்	க
௮	வெள்ளைப் பருத்தி வேர்	க
௯	அமுக்கிரா வடக்கி வேர்	க
௰	கிளிமுட்டான் வேர்	க
௧௧	[illegible] வேர்	க
௧௨	பெருங்காயம்	உ
௧௩	வசம்பு	உ
௧௪	சிற்றரத்தை	உ
௧௫	கிராம்பு	உ
௧௬	வெள்ளைப்பூண்டு	உ
௧௭	திப்பிலி	உ

சாதிப்பத்திரி உ
கஸ்தூரி உ

மேற்படி வேர்களின் சாற்றில் மேற்கண்ட கடை மருந்துகளை அரைச்சாமம் கல்வத்திலிட்டு சாந்துபோல மைபோல அரைத்து குன்றிமணிபோல உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்

வாதச் சூத்திரம் கஉ

காரமென்றால் பல்லியுட கல்லோ காரம்
காரத்தில் கடுங்கார மேதென்றால்
சாரமென்றால் சாரமிது பூமி நாதம்
சாதகமாய்ச் சொல்லாதே யுகமே சுத்தி
ஊரமென்ற சுக்கிர லோகச் சுத்தி
மகத்தான வல்லத்துவிலைத் சுத்தி யாச்சு
தீரமென்றால் தேசியுட வாசி நீர்
சிறப்பாக யெமசுத்தி செய்து பாரே.

கூ

பாரென்று ஆயிசொன்ன படியே பார்த்தேன்
பாங்கான கிடைநாளில் சலத்தில் கொண்டு
சேராத யெடுத்துமே பீங்கா னுள்ளே
சிறப்பாக வெட்டோடுகள் ரவியில் வைத்து
கூராக ரவியில்வைக்க நீரும் வற்றும்
கிரிப்பாகி பதமாகக் கருவாய்ச் செய்ய
காரான நாற்றிலேகால் தலையாய்த் தானே
காட்டாகச் சொல்லி வெட்டுடன் கருங்கு ராகே

ஓங்கார மூலவட்டக் கணேசன் பாதம்
ஒளி வெளியா மனோன்மணி நாதாக்கள் பாதம்
நாங்கார சாரமதை மூன்று பத்தில்
நடங்காணும் புலத்தியனே சொன்ன மானே
தெங்காத நாதவிந்தாய் சமைந்த சம்பு
சிவமென்றும் சத்தியென்றும் பேருமாச்சு
ஆங்கார மாணுவமும் அடங்கிற் றானால்
அரகரா அடிமுடியுங் காப்புத் தானே. (உ)

காப்பான அடிமுடியும் நருமேன் றுந்தான்
கருக்காடு வெளிக்காடு ஒளிக்கா டாகும்
காப்பான அளர்க்காட்டால் குறைசை கட்டி
சங்கையா யிருந்தவரைக் கண்ட துண்டோ
பூப்பாடு வாராது மாது ஊதம்
பொங்கிவரும் அப்பு மெய்ப்பு சரியாகத்தானும்
வாய்ப்பாட்டி னல்வருமே தசமாந் தீட்சை
வகுத்தபடி குருமடித்து பாதம் பாரே. (௩)

தானென்ற உப்பைத்தான் செயநீர் வாட்டி
    தாரத்தார் கவசமது போடு போடு
தேனென்ற கல்லுப்புஞ் சாரங் கூட்ட
    செயநீரா லிரத்தவர்ண மாகு மாகும்
மானென்ற கல்லுத்தி வாட்டி யப்பா
    மகிழ்வாகப் புடம்போடச் செந்தூர மாகும்
ஊனென்ற சரக்கெல்லாம் இதற் சாகும்
    உத்தமனே துரிசிட்டு சமாதி வையே (௫)

வையப்பா அறுபதுநாள் சமாதி தன்னில்
    வைத்திருந்து மறுபடியு மெடுக்கும் போது
செய்யப்பா பராசக்தி வகைக்குந்
    திறமாக வஸ்த்துசுத்தி பூசை செய்து
கையப்பா வெடுத்துநன்றாய்த் தொழுது நின்று
    கர்த்தனே தாவென்று கிட்டை பூண்டு
மெய்யப்பா சமாதிதன்னை திறந்து வாங்கு
    மொய்க்கவே துரிசுநன்றாய் ரவியிற் போடு
(௬)

பொட்டிடவே துடிசதுவும் தெருக்கி மெய்யா
பூரணமாம் மெத்தவெள்ளி அதை மங்கும்
காட்டிடவே திண்ணது கார சாரங்
காண்பித்தார் கண் தெரிக்கும் கருவைச் சொன்னேன்
நீட்டிடவே துரிசின் மேற் காரு மேற்ற
நிசமாகச் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளு
பூட்டிடவே முன்னுப்பு வீரம் பூரம்
புனுகிடவே உரம் வண்டு வெடியுப்பு சூடே
(எ)

சூடசுடன் முன்னுப்பிசின் சாக்கெல்லாங் கூட்டி
சுங்காக சிங்கி யரைத்து நன்றாய்
பாடமாய் உலர்த்திட்டு புடத்திற் போட
பாங்காக ஐந்து நாள் கையில் வைத்து
தேடவே திக்கினால் ஊது ஊது
திறமாகக் கைபதித்தார் அன்னமாச்சு
நாடவே பரிச்சன்ன மெந்திக் கொண்டு
நாட்டுவாய் சூதமொன்றி லறிந்து போமே
(அ)

போட்டவுடன் சூதமங்கே விரைந்து போகும்
புகழான சூதமங்கே விரைந்து போகும்
காட்டினேற் பாஷாணங் கட்டிப் போகுங்
கலந்திட்டால் தானகுழு மீய மாகு
மீட்டினல் மனேவிலியும் வெந்து போகு
மீதண்ட வீரமது அடங்கி நிற்கு.
மாட்டினே னிது கொண்டு சரக்கையெல்லாம்
அப்பனே வேதைக்கி வழிசொல் வேனே
ஈ

<u>வேதையறிய</u>

சொல்லுவேன் நாகமொடு சூதங் கூட்டி
சுகமாக உருக்கையிலே களங்க மாகும்
வெல்லவே நாதந்தைக் குடுக்க வாங்கும்
விரையாமற் கெந்தியைநீ குடுக்க வாங்கும்
மெல்லவே லோகத்தி லொருமாப் போடு
வளமான களங்கத்தை வாங்கிக் கொண்டு
நல்லவே செம்புவெள்ளி யருமா வீதம்
நாட்டினேன் மாத்தெட்டு நவின்றிட் டேனே
(கo)

ஊட்டுவாய் நீகளங்கத்தை சேர்த்து நீக்க
யேகாந்த வுழலையை யெடுத்துக் கொண்டு
மாட்டுவாய் முருக்கம்பூ கீழ்மே லிட்டு
மகத்தான பொன்னம்பூ யிப்படியே போடு
காட்டுவாய் பூநீறை கீழ்மே லிட்டு
கலக்கவே செங்கலத்தான் குடைந்து வுள்ளே
வூட்டுவாய் நீகளங்கத்தை பதனமாக
மேலேயொரு செங்கலத்தான் மூடிப் போடு

(~~கக~~)

வாட்டுவாய் சீலமண் செய்து கொண்டு
வாகாகப் புடத்திலிடச் செந்தூர மாமே. (கக)

செந்தூரங் கொடுப்பதற்கு வகையைக் கேளு
செயம்பெற்ற வீரமொடு பூரங் கூட்டி
மந்தரமாஞ் சரக்கிரண்டும் பொடித்து கூட்டு
அப்பனே கூடவிட்டுக் கலந்து கொண்டு
தந்திரமாம் வெள்ளியொன்றி லொடுமைப் போடு
தாரணியில் வயதுபதி னாறு மாகும்
நந்திபணி யாத்தாளைப் பூசித் தாக்கால்
நாடுவாள் வேதையிட்டு நடத்திப் பாரே. (கஉ)

முற்றிற்று

முப்பூ தீட்சை சூத்திரம் - கசா

பூரணமாம் புங்கவன்றன் பாதம் போற்றி
புகழுவே சிவகாமி யாத்தாள் பாதம்
காரணமா வறிவிலின்று மனத்தைப் போற்றி
கந்தனுக்கு கருணைவரச் சீருறக்கி
வாரணமா முகத்தோனைப் பணிந்து போற்றி
வல்லமையா மிந்நூலின் பொருளைக் காணச்
சீரணமாய்ப் போகாமல் தெளிந்து சொல்வேன்
சித்தர்பத மனதில்வைப்பா யொன்றுங் காப்பே (௧)

என்றன முப்பூவின் தீட்சை மார்க்கம்
எளித்தாரே ஒகோகோ பூரணமே யாகும்
நன்றன சிவதீட்சை கெங்கை யொன்று
நல்லதொரு சத்திக்கு சூநீ றைந்து
சென்றிடும் கல்லுப்பு பூநீ ரேழு
செய்தபின்பு மூன்றுமொன்றாய்ச் சேகரித்து
வென்றிடும் வெடிசுக்கு இருநீர் தேதி
வெளியாச்சு வாசமது கோடசம் பாரு. (௨)

பாரு நீ சோடசத்தின் குருதான் மக்காள்
பகரார்கள் நாதாக்கள் பாடல் தோறும்
தேருநீ சோடசத்தின் குருதான் காண
செப்பரிய சித்தரிடந் தொண்டு செய்வாய்
சேருநீ சித்தரிடஞ் சேரா விட்டால்
செய்வதென்ன யிந்நூலைத் தேடிப் பாரு
ஆரடா யென்னைப் போற் சொல்லப் போறார்
ஆச்சரிய மிந்நூலின் பெருமை தானே. (௫)

பெருமைதனைப் பாடிவிட்டார் சட்டைநாதர்
பிசகாமல் எள்ளளவுந் தப்பில் லாமல்
அருமையென்ற நூலதற்குக் கிழித்தா ரய்யோ
அரகரா திருமூல நாதாக்க ளெல்லாம்
உண்மையென்ற வாதத்தை வெளியிற் போட்டார்
உத்தமனே நவகோடி சித்த ராச்சு
குருவதனை வெளியாமல் முன்பின் வைத்தார்
ஐகருணைக்கே கொங்கணர்நூல் நாலு பத்தே.

---

(௬)

பத்தாகும் நாற்பதிலே நன்றாய்ச் சொன்னேன்
பரிபாஷை யாகவுந்தான் பாடிப் போட்டேன்
ஒத்தாகும் வெகுசுருக்க மிந்நூல் பார்த்தால்
வேதாந்த வாதமது கெண்டம் பண்ணும்
கொத்தாகக் கனிந்தபழம் போலா மிந்நூல்
கூறினேன் குகைதோறும் வெளித்து வைத்தார்
இத்தாகும் பூரணநூல் இரண்டு மிந்நூல்
திறவாகும் வழிமுறை பதினாறு காணே.
௩.

கருவிடையம்

காணவே தீட்சை சொன்ன அப்பூ வக்கு
கருவிடையஞ் சொல்லுகின்றேன் கூவெண் ரப்பா
பூணவே யிரண்டுபடி நீரை வார்த்து
புகழவே கலக்கிவைக்க உப்பாய்ப் போகும்
தோணவே பதிமூன்று மாதத்துப் பாடு
துகையான உப்புக்கே சமன்தான் மூன்று
மூணவே குருவாசீ கருவதுதான் மைந்தா
உறுதியுடன் சொல்பார்த்து காரமேற்றே.
௬.

ஏத்துவதக் கின்னூலி வைத்துக் கொண்டு

புயெல்பாக பதினென்பேர் சூத்திரத்தைப் பார்த்து

நாற்றிசையுங் கீர்த்திபெற அவர்களைப் படிக்கி

நலமாக அவ்வகைநீ சுண்ணங் செய்தார்

போற்றுமே மாற்றுதுவு மேலுக் கொங்கிடம்

புத்திசொன்னே னவர்மகர்கள் வழிமுறைப் போக்கு

தோற்றுமோர் சத்திசொல்வார் இவத்தைச் சொல்வார்

சுகமாகச் சுட்டகல்லுச் இவன்தான் பாரே.

(எ)

கல்லதுதான் துய்யவெள்ளி யாகி மைந்தா

கடுமிரவு யல்லரியும் மதியில் கட்டும்

அல்லதுதான் [illegible]தே டல்லோர் காணும்

மதிலெக்கிம் உவர்க்காட்டில் அங்காய் வாழ்வார்

நல்லதுதா னென்ன சொல்வேன் வாரிக்குன்னே

நயமாக வரைந்திருக்கிம் கல்லுப் பங்கே

சொல்லது தான அறிவை விட்டா லொன்றுமில்லை

சுகமான நடுமுறையை விட்டார் போசுதே

(அ)

போச்சென்று மலையாம லொன்று சொல்வேன்
புகழ்பெறவே அன்பருக்கின் னொப்பு வித்தை
வாச்சதுதான் பொன்னுதி முக்கியாகும்
அப்பனே செந்தூரம் கோடிக ளாகும்
வாச்சுதே வயித்தியந்தான் னென்ன சொல்வேன்
வரிசையாய் பாடிவிட்டே னிந்நூல் மக்காள்
காச்சுதே வுலகத்திற் கிட்டா தையா
கருவடக்க மில்லையது வெளியாம் பாரே. (௯)

சித்தர் செய்கை.

ஆதியிலே திருமூலர் வாதந் தேடி
அதிசயமாய் இந்நூலின் முறைதனைக் கண்டு
வீதியிலே வாராமல் மனதடக்கி
வேதாந்த சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்துச்
சோதியிலே மனமுருகி அமிர்த முண்டு
தொடுகுறிபோ லாதார மாறும் பார்த்து
வாதியென்று பேர்கொள்ளோ தனித்தி ருந்து
வதிசயமாய்க் கற்பமுண்ணை காயசித்தியாச்சே (௧0)

காயசித்தி செய்தலவோ மேற்சென் றாது
கயிலைபதி நாதனையுங் கண்டு போற்றி
மாயசித்தி கிரிகையல்லோ திரமாய்ச் செய்து
மகத்தொடுத்து அணிடமுதை லதிசயமே பார்த்தார்
தேயமொடு பட்டணமாங் சிதம்பரத்தில்
செகமதனுங் ஆண்டவொரு சேர்ம னப்பா
நேயமுடன் கனகத்தால் நடேசர் வார்த்தான்
நிசமாகச் செம்பொடு காசிட் டாரே.

(௪௧)

இட்டிட்டார் கனகமது செம்பாய்ப் போச்சு
யியல்பான கெந்தகத்தின் மகிமை யப்பா
வெட்டிட்டாப் போனவே தொழிக்கீ சொல்லுவர்
பொருள்காணும் அவர்நாகப் புகுந்து பாரு.
மட்டிட்ட தொழில் ~~கள்~~செய்த கற்பங் கொண்டு
மதியேறி வந்துபெறி யோரைக் காரு.
வெட்டிட்ட கிணறதுபோ ~~ல்~~ ஊற்று காணும்
வெளியாகும் பதினெண்பேர் இந்நூல் தேடே

(௪௨)

தேடியே பார்த்தவுடன் சித்தி யாகுந்
தெளிவாகுஞ் சட்டைமுனி நூலைப் பாரு
வோடியே திரிந்தலைந்து யோகம் பாரு
ஒளிகண்டால் வெளியாச்சு ஞானந் தேடும்
பாடியதோர் சுந்தரன்தன் நூலைப் பார்த்தால்
பதிவாகும் வாத வித்தை வெளியாய்ப் போகும்
காடுசெடி யலைவானேன் வகார மென்று
கருதிப்பார் கைகண்ட தொழில் முன் பாரே
(காவ)

வெடியுப்புச் செயநீர்

பாரேதான் வெடியுப்புச் செயநீர் கேளு
பாலகமாய்ப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
வேறேதான் சோடசமாங் கெந்தி நீறு
ஊறாங்கிய காசைந்தாகுங் கல்லுப் பைந்து
கோரான நவச்சார மைந்து பேதி
கொடியதொரு அப்பிரகந் துரிசு சீனம்
ஊறான சூடன் வெள்ளை வெண்காரம் பூரம்
வரிசையுடன் இந்துப்புக் கடல்நுரைதான் கூட்
டே
(கசு)

கூட்டுவது வீரமுடன் காசைந்து சேரு
சிறிப்புடனே துகைபெற்றுப் பூரணமாம் பாரு
ஆட்டுவது புளியெட்டுக் கொங்கா யெட்டு
அழகான யேறவென்ற சதையு மெட்டு
பூட்டுவது பழச்சாற்றிற் கிரைத்துக் கொண்டு
புகழாக முறையோடே யேழுநா ளாட்டி
தீட்டுவது வில்லிதட்டிக் கவியத் துள்ளே
சிறப்பாக கற்சுண்ணம் பூசி யாற்றே
(கசு)

ஆறியபின் வில்லைவைத்துச் சீலை செய்து
அடவாக நூறெருவிற் புடத்தைப் போடு
தேறியபின் வலிலொன்று சாரங் கூட்டி
சிறப்பாக வாட்டியதை வழித்துப் பின்கான்
கூறின வங்கிஷ்ல் வீரம் பூரங்
கூட வெட்டுச் சரக்குகளிற் றடவி வாட்டு
மாறினபின் கப்ரகையைந்து சுக்கிற் றாக்கீக
மாண்டுபோம் லோகமெ பொன்னாம் பாரு
(கஎ)

பாரிந்த நூலைப்பகர்ந்தா லெழு நரகம்
பாரிந்த நூலைப் பண்பாகப் பூசிப்பாய்
பாரிந்த நூலைப் பதினாறு சுருக்கம்
பாரிந்த நூலைப் பகரார் பெரியோரே.

சிற்றின்று

காவியச் சுருக்கம் ௧.

ஆதியந்த மாதார மகண்ட நாதம்
அடுத்துநின்ற நிராதாரந் துரத்தக் கப்பால்
சோதியந்த நகாரமடா பிரமன் வீடு
சுடரொளியா மகாரமடா மாலின் வீடு
நீதிபெரு ஞானமொழி சிகார மப்பா
நிர்க்குணத்தின் ருத்திரனும் நிலைத்தார் பாரு
வாதியெனும் மகாரத்தில் மயேசன் றானும்
மனம்புத்தி அறிவுமதி விவேக முள்ளோன்
சோதியெனும் உயிர்வாழ்க்கை யகார பீடம்
சதாசிவனும் கொலுவிருந்தார் நிர்க்குணத்தின்
ஓதியந்த பெரியோர்கள் ஓம் நமசிவய வென்று
அர்ப்பணமாய் ஸ்தம்பித்து ஒடுங்கியாய் நின்றார்
சாருதியா மாயிரத்தைச் சுருக்கி யானும்
சடாக்ஷரப் பொருளாக்கி யின்றிற் சொன்னேன்

முப்பூ முப்பது

ஆதிபரா பரத்தினுடை கிருபை போற்றி
அடிமுடியா மைங்கோலம் நந்தி காப்பு
நீதியாம் வாரணத்தின் மகவன் காப்பு
நிர்மலமாஞ் சதாசிவத்தின் வடிவே காப்பு
பாதிமதி யணிந்தசிவன் பாதங் காப்பு
பத்திமுத்தி சித்திவழி ரவனே காப்பு
ஆதியந்தோர் வாணியின்றன் பாதங் காப்பு
ஓங்கார மூலவட்டத் தொளிகாப் பாமே (க)

ஓங்கார மூலவட்டக் கணேசன் பாதம்
ஒளிவெளியா மரெண்மணி நாதாக்கள் பாதம்
நாங்கார சாரமதை மூன்று பத்தில்
நயங்காணும் புலத்தியனே ஞான வானே
தேங்காத நாதவிந்தாற் சமைந்த சிப்பு
சிவமென்றும் சத்தியென்றும் பேருமாச்சு
ஆங்கார மானவழி மடங்கிற் றைசல்
அரகரா அடிமுடியுங் காப்புத் தானே.
(உ)

காப்பான் அடிமுடியும் நடுமேன் நுந்தான்
கருங்காடு வெள்ளிக்காடு வெளிக்காடாகும்
காப்பான அளர்க்காட்டில் குதிரை கட்டி
சங்கையா யிருந்தவரைக் கண்ட துண்டோ
பூப்பாடு வாராது மாது நாதம்
பொங்கிவரும் அப்புமிப்பு சரியாய்க் காணும்
ஓய்பாட்டி நல்வருமே தசமாங் தீட்சை.
உகந்தபடி குருமுடித்து வாதம் பாரே.
(௩)

பாரப்பா குருமுறைக்கிங் காலஞ் சொல்வேன்
பங்குனியும் சித்திரையும் மகர கும்பம்
வேரப்பா எடுப்பதற்கு அந்த காலில்
ஓயன்படவே கதிர்தாண்டி மதியில் நிற்கும்
சீரப்பா தேற்பக்ஷம் தசமி யன்று
திதிபார்த்து சாகாக்கால் முடிக்க நின்று
ஊரப்பா ஆயிரத்தெட் டதமா மென்றும்
உச்சிமலை மீதிருந்த பூவை வாங்கே.
(௪)

பூவான பூவிலொரு பெருநங் கேளு
பொங்கிவரும் பஞ்சவர்ணம் மாது நாதம்
நாவான தசையாமல் நிமையா டாமல்
நாலான கேசரியில் மனதை யூணி
தாவான படைந்தேட கண்டு போற்று
சதுர்முகனுங் மாயவனும் காணாப் பாதம்
மாவான மானணிரங் கொண்டோ ரெல்லாம்
மவுனமனோன் மணியாகி வாழ்ந்திட் டாரே. (௫)

வாழ்ந்திட்ட அக்கினியும் வாய்வுங் கூடி
வாசமற்ற பூமியின்கீழ் அண்ட மாச்சே
தாழ்ந்திட்ட அக்கினியும் வாய்வுங் கூடி
சமரசமாய் நடுவான பிண்ட மாச்சு
சார்ந்திட்ட இரண்டாற்கும் பலமே தென்றால்
தருவான மண்ணோடே தண்ணீ ராச்சு
ஆழ்ந்திட்டுப் பார்த்தவினை ஆதி காண்பான்
அரியென்றும் பரியென்றும் நதைன் வேறே. (௬)

கருவான பூமியுட னதம் வாங்கி
கல்லுவந்து நீர்க்கரைத்து ரவியிற் போடு
வருகாதே யிப்படியே பத்துமுறை காச்சு
வந்துவிடை நீராகக் கட்டுப் போகும்
உருவாகு மாதிமகன் சிவத்தைத் தானும்
உதியொளியாஞ் சத்தியென்ற பூரணத்தை வைத்தா
குருபாதி மூன்றிலொன்று சிவத்தை சேர்க்க
பரிவான ரவிமதியி லுப்புண் டாச்சே
(எ)

உப்பான வுப்புக்கு நாமங் கேளு
உகமையுள்ள வெடியுப்பு வென்றும் பேரு
அப்பான மேகத்திற் பிறந்த வுப்பு
அனற்காட்டல் இடையிருக்கும் தானோ சில்ல
செப்பாத ஞானகிரி சோதித் தேறல்
சிவகிரிவெளி யாக்கு மிந்தத் தேவயுப்பு
துப்பாகக் கற்பமுள்ள மும்மூல வீடு
துரியம்விட்டு அதீதவெளி காணும் வாயே
(அ)

காணாது காணுமடா யிந்த நாலில்
கண்டவர்கள் சொல்லார்கள் வெளியிற் போடார்
தோணாத பூரணத்தைத் தொற்று விக்கும்
சொற்படியினா லாயிரத்தெண் சகஸ்த்திர ஜபத்தை
நாணாது வொன்றுக்கும் தார சாரம்
நஞ்சுகொண்டு செத்தவன்போல் சாக்கெல்லாம் சாம்
பேணுகிற உலகத்தில் தசமாங் தீட்சை
பெலத்தயுத்தி யறிவதனால் பேணிப் பாரே. ௯

அறிவான பூரணமே ஆத்மா வாகும்
ஐந்தின் றெட்டிரண்டுங் கண்ட போதே
குறியான குறியறிவாய் மைந்தா சொன்னேன்
கூடும்போ தேகமுடன் யோக மாகும்
சரியான பனிரெண்டும் பதினா றுள்ளே
சத்திசிவ மிரண்டுமொன்றாய்த் திரும்பப்பா
பரியான பரதேசி யிதுவே யாகும்
பசியுடைய அமிர்தத்தில் பானங் கேளே.
(௫௦)

கலியான பதினாறில் நாலும் பாரு
கண்டதடா சூரியன்றன் பனிரெண்டால் நாலு
துலியாகப் பறைந்ததிலே எட்டு நின்று
சோமகலை சூரியகலை யாயிற் றப்பா
அலியான வாரியினை லமர்ந்த மன்னு
ஆதியென்றும் அந்தமென்றும் அமைந்த பிண்டம்
வலியான சிவகலைதா னதைநின் றக்கால்
வாங்குவதும் உடுவதும் வழக்கம் தானே. (கக)

வழக்கமாய் இங்கிவையை மடாத்து வைத்து
வாய்மூட நைலியுமே மறியோ டாமல்
முழக்கமாய் நாடி நரம் பசையா டாமல்
மூன்றுமுத லாறுதலங் கிரசே கண்டாய்
புழக்கமற்று நெற்றி உச்சம்மாகப்பிரம்ம
புறம்பாக வாசமதாய் சமாதி நில்லு
பழக்கமாய் அத்தமதை நெருக்கி டாமல்
பார்க்கிறது யிருகண்ணும் ஆடாமல் நில்லே
(க௨)

நில்லென்றால் வேதாந்தம் நிற்குமோ சொல்
நிற்பீட மடையருக்கு வருமோ வாதம்
சொல்லென்றால் பெரியோர்கள் சொல்லுவாரோ.
சொக்கி மென்ன போவென்றால் போறலாமோ
அல்லவென்ற வினையகற்றி நந்தி சொன்ன
அறிவுதங்கும் மனம் நிலைக்கும் ஆசானவாய்
மல்லென்னும் சண்டையிட்டு தர்க்கம் பேசும்
வாய்வீணர் தங்களுடன் வாய் பேசாதே.
(௧௩)

பேசாதே உலகத்தில் கர்மி கோடா
பேச்சறிந்து பேசாமல் பழியே செய்வான்
கூசாமல் நாலிருந்தார் கொங்கோ ளான்
கொடுக்காட்டா லந்தநாளைக்கே னென்பான்
ஆசானைப்போலவவன் சரியாய்ச் சொல்வான்
அகஸ்தியன் மேலாண்மையில்லை யென்று போடு
தேசாதி வழக்கமெல்லாம் பாரறிந்த மெத்த
சிவனைக் கெப்பதையும் பதனம் பண்ணே
(௧௪)

ஒப்பதுபோல் வொருநாலும் சொல்லா தப்பா
முன் சொன்ன வாதமிரு நூறும் பாரு
செப்பதுபோல் பாடிவைத்தேன் பன்னிரண்டில்
சிவயோக நிகண்டிலே நூறுஞ் சொன்னேன்
ஒப்புவமை யில்லாத கலைக்கியானஞ் சொன்னேன்
உத்தமரைக் கிட்ட வைத்து உண்மைகேளு
தப்புமொழி சொல்லவில்லை ஒப்பதிலேமைந்தா
சகல கலைக் கியானமெல்லாம் பாடினேனே
(கரு)

பாடினேன் கலைக்கியானம் பாடும் போது
பரமசிவன் தன்னுடே ரிஷிகள் வந்தார்
நாடினேன் ஞான வரைப் பூசை பண்ணி
நல்வசனங் கேட்டமர்ந்த நாலுஞ் சொன்னேன்
தேடி நீ செவ்வதென்ன வென்று கேட்டால்
உண்மைபெற்ற சித்தருக்கா மென்றதாலே
நாடினேன் தாய் சொல்லித் பாடிப் போட்டேன்
நல்லோர்கள் மிருந்தால் வழங்கா தென்னே
(கசா)

ஊடுகோதே அண்டமதின் இட்டை வாங்கி
மேற்கசிந்த கோரையை நீ வாங்கிப் போடு
உடுகோதே யைபத் திரண்டு தீட்சை
யுத்தமனே பஞ்சீகரணை யெடுத்த போது
நடுகோதே அடியிடை நடுவேன் அம்புடம்
நாதவிந்து பிண்டமெனப் பேருமாச்சு
சுடுகோதே நீர் நெருப்புக் காற்று மாச்சு.
சோமசூரியெக் கனை யென்றும் பேரு (கள)

பேரான வழிவிரை நன்றாய்க் கேளு
பெரிதான அகாரமென்ற கல்லில் வாங்கி
ஊரான கல்லூறலில் மாவதாக்கி
உத்தமனே சத்தமிலம் தன்னிற் போடு
நீராகக் கரைத்திடு மதனிற் றுலே
நிறுவை யெத்த ரவியைத் திறு உப்பதாக
நேராக பிடித்த வண்ணம் பத்துமிறை கலக்கி
நேர்வை யெத்த ரவியெத்துள் வைத்திட்டாயே (கஅ)

வைத்திட்ட வப்புக்கு நாமம் கேளு
வாசமுற்ற பூநீரென் றதற்குப் பேரு
மித்திரனுப்பு வழலையென் றதற்குப் பேரு
மேலான வுவர்ப்புவென் றதற்குப் பேரு
சுத்திட்ட லிங்கமென்றும் ரதியென்று மீ
சுடரென்றும் அரனுப்பு வென்றும் பேரே
(கக)

பேரான வுவர்க்கடுக்க லிங்கமென்றும்
பெரிதான சிவரூபம் பிறையென்றும் பே
ரான வெள்ளைக்கல் லென்றும் பேரு
உருவான அகாரமென்றும் பேரு மாச்சு
சாரான சரக்கென்றும் சாரமென்றும்
இருத்ர சம்மார கர்த்தா வென்றும்
பேரான வாதியென்றும் மீல மென்றும்
பெருமையுற்ற வகாரமென்றும் பேராமச்சு
(உ0)

ஆச்சப்பா அரன்தேயம் வெள்ளியாச்சு
அவன்தேகம் இரப்பான வடிவுமாச்சு
பேச்சப்பா வரனுப்பு நீல வர்ணம்
சிலையான நடுவாச்சு வேறேயில்லை
பேச்சப்பா தூர்ரென்று கவர்கள் கோடி
மேடர்களை வென்றவில் மின்சு மாச்சு
பேச்சப்பா சொல்லுகிறேன் சக்தி நாமம்
பெருமையுள்ள ஓங்கென்றும் ரவியின் பேரே.
(உக)

ரவியான நடுவென்று சொல்லக் கேளு
இயலான சிகாரமென்று இவமாமென்று
புவியான சிவனென்றும் பால் துயிரா மென்றும்
பொருளான கெங்கையென்றும் சிய மென்று(ம்)
இவியான ஆதி பிரீ ஜெயவீ ரென்றும்
திருவான அப்பென்றும் ஸ்ரீ என்றும்
தவியான பிரணவத்தின் சிறீ என்றும்
சமுத்திரத்தி னறு வகை ரென்றும் பேரே.
(22)

பேரான சடாதார அமிர்த மென்றும்
பெரிதான அமிரிந் றென்றும் பேராம்
ஊரான கிண்ணி ரும் உண்ணைப்பா வென்றும்
உலகமெல்லாம் படைத்தளித்த உமிரீ றென்றும்
வாரான ஆதியுட நாமங் கேளு
வளமையுள்ள வெறுப்புச் சத்தமென்றும்
நேரான கமலமென்றும் சிப்பியென்றும்
நிலையான ஆகாசப் பிறவி யாச்சே
(உ௯)

ஆச்சப்பா கிம்பிருங்கல் லென்றும் போரூ
அதிகார பாவையென்றும் ரவிதா னென்றும்
நிச்சப்பா வெள்ளிக்கல் கிம்ப மென்றும்
நிலையான ஆனைக்கல் மவுன மென்றும்
போச்சப்பா வழலையென்றும் மவுனியென்றும்
பலமான ஆயிரத் தெண் கமல மென்றும்
நிச்சப்பா காமப்பால் காணற்பா லென்றும்
நெய்மஞ்சள் கலிவென்றும் பேரென் பேரு.

நடுவான ஆகாச கெற்ப மென்றும்
நல்லதண்ணீர் பச்சையென்றுங் கல்லுப்பென்றுங்
நடுவான லேமகமென்றும் சுன்னமென்றும்
நக்சென்றும் முங் ரென்றும் உலைமை யென்றும்
வுரவன்னக் காந்தி யென்றும் மாதி யென்றும்
மாலென்றுஞ்சத்தி யென்றும் ~~[illegible]~~ குளென்றும்
துடுக்கனென்றும், துருவென்றும் பெருமாசிசு
சுகாதீத பூரணமென் றிதற்குப் பேரே.
(உரு)

பேரான சத்தியப்பு வென்று கூட்டு
பெருமையுள்ள உலைந்துப்பு அதற்குப்பாதி
சீரான சுழியப்பு மிரண்டுங் கூட்டு
சிவதெவ்வை விட்டாட்டு சாமம் நாலு
நேராக வாட்டி மயமென் உல்லி தட்டு
நிலத்ததொரு/எருவடுக்கி/புடத்தைப்/போடு
பாரான பரித்தகட்டுமவி பூசிக் காச்சி
பண்புடனே புடம்போடச் சுன்ன மாமே
(உசா)

ஆமப்பா முப்பூவை ஏழுமுறை நீயும்
அக்கினியிற் சுட்டெடுத்து ஆயிரத்தின் படியே
நாமப்பா சொல்லிவைத்த காவியத்தைப் போலே
நாட்டிலே யின்னமொரு நூல்தானுண்டோ
வாமப்பால் கொண்டவர்க்கே யெய்துமெய்தும்
மறுசென்ம மெடுத்தாலும் அவர்க்கே யெய்தும்
சோமப்பால் சூரியன்பால் கொள்வதற்கு
சுளுவாக யின்னமொன்று சொல்கிறேனே
(௨௭)

சொல்லுகிறேன் பிரிதிவிதான் கம்பியுப்பு
சுங்கான அப்புவல்லோ பாறையுப்பு
நவிலுகிறேன் அக்கினிதான் கல்லுப்பாகும்
நாடுகின்ற வாயுவதே யிந்துப்பாகும்
வெல்லுகிற ஆகாசம் வழலையுப்பு
வேதாந்த மனோன்மணியாள் யீன்றவுப்பு
தொல்லுகிறேன் சரக்குகளை யென்று சொல்லி
இல்பாவி காத்திருந்து கிழிகொண்டானே
(௨௮)

கொண்டவன் அம்பலத்தி லாட்டஞ் செய்து
கூடுவிட்டு மறுகூடு நடனஞ் செய்தாள்
கண்டறிநீ நீற்றவெண்ணில் கனகச் சுண்ணம்
கிளஞ்சிகா ளிடைக்கியிட்டு சாரஞ் சேர்த்து
நின்றயிடை தன்னோடாய் சாரஞ் சேர்த்து
சிசியென்ற வெண்கருவா லரைத்து வில்லை
சுண்டகண் ரெண்டிடவெ ரவியில் வைப்பாய்
சுணிவாகப் புடமிடவே சுண்ண மாகுமே. (2 சூ)

—

ஆமப்பா யிதுநீற்றல் துரிசு வெள்ளி
யவ்வெள்ளி சுண்ணத்தால் ரசத்தை நீற்றி
ஓமப்பா பரித்தகட்டுனீ பூசிப் பாரு
ஓ கோகோ சொர்ணமது சுன்ன மாச்சே
சாமப்பா சொல்லுகிறேன் தாம்பரத்திற் கிய
நாட்டோர்க்குப் பிழைப்பதற்கு வழியு முண்டாம்
காமப்பால் அதையெடுத்து வெள்ளிக் கிய
கனகமாங் கருமென்று பத்தும் மாற்றே
மாற்றாறு (௩௦)

பச்சைவெட்டு-சூத்திரம்-க௫.

அரிதாரம் மிருதிவி யாகி நிற்கும்
ஆனதொரு சவ்வீரம் அப்பு மாகும்
பெரிதான கெவுரியோ தேயு வாகும்
பின்னுமெனும் வெள்ளியோ வாயு வாகும்
அரிதான லிங்கமோ ஆகாச மாகும்
அருந்தியே பச்சையுடன் மாட்ட லாகும்
தெரியாத வைத்தியரே யின்னா லப்பா
சித்தரப்பா/சொன்ன உத்தை/செகத்தில்பாரீர் (க)

செகத்திலுள்ள வயித்தியரே செப்பக் கேளு
திரமான அரிதாரங் கட்டி வாங்கி
சுகத்திலே சுண்ணம்புக் கல்லே வைத்து
சுத்தியதைச் செய்தின் யெடுத்துக் கொண்டு
மிகத்திலே மனிதருக்கு மீள் காசம்
யெலிகைகள் வெகுபாகம் பித்தம் பாண்டு
மகத்தான குளிர்காச்சல் மகோதரங்கள்
வருகின்ற நோய்களுக்கு வெகுயே சக்கிலம். (௨)

சுக்கான சவ்வீரக் கட்டி வாங்கி
சுவாசமொடு காசம்நீ ராமல் வீக்கம்
மொக்கான குன்மமெட்டு யின்ப்பு யீளை
மிக்கதொரு நெஞ்சடைப்பு மேலாகிர் கொள்ள
தொக்காகும் சூலையொடு வயத்திற் கெண்டை
தேராத நீரிழிவு நீராமைக்கும்
இக்காத கொடிவேலி வேர ரைத்து
திடமாக அரையுண்டை செய்யப் போ
மே.

போமடா கைவசிய டொக்கைச் சொல்வேன்
புகழான தோஷமொடு சுரத்தக் கொல்லாடம்
நாமடா சக்கினிட தன்னின் தன்னில்
தரியாதே நெல்லிடைக்கி மேல தாக.
நாமடா சொல்கிரந்தி அசிகிரந்தி மேகம்
நயமாக வயிற்றுவலி சூலைக் கெல்லாம்
ஓமடா கடுப்புமடி தன்னி லேதான்
ஒருகோடி நோய்களெல்லாம் ஒழியும்பாரே
(௯)

பாரென்ன வெள்ளிப்பா ஷாணந் தன்னை
பாங்காக யெருக்கம்பால் ஊட்டு ஆட்டு

சீரென்ற சிறுபயறு அளவு வுண்டை
திரமான பெருவயிறு உள்மாந் தைக்கும்

சாறென்ற வேப்பிலைச்சா றுள்மாந் தைக்கும்
குணத்திலே குன்மட்டுக்கி தீரு மென்றே

வேறென்ற சோகைக்கு மிப்படியே செய்ய
வெகுகால நோய்களெல்லா மிரண்டு போகும்
(௫)

போகுமே லிங்கமடா சன்னி தோஷம்
பொறுக்காத நெஞ்சடைப்பு வாய்வு மூர்ச்சை

தாக்குமே வயிற்றெரிவு வயிற்றி லூதல்
தனியின்றி. சாற்றிலிட தவிர்ந்து போகும்

காக்குமே சூலையோடு பித்தங் காமாலை
ஊறுபாகம் வலிகுன்மம் சோகை யெல்லாம்

பாக்கமாங் கொடிவேலி சாற்றிற் செய்ய
பறக்குமடா யின்னம்வெகு ரோகந் தானே
(௬)

காந்தநாவு கெந்திசமன்
கருப்பங் சாறும் ஊட்ட ரைத்து
பொருந்த சட்டி தனில் தடவி
ஒரு மூடி ஒரு சட்டி
பாந்த மாக சீல் செய்து
பாங்காய் புடத்திற் போட்டெடுத்து
வாந்தமாக பின்னு மொரு
வளமாய் முன்போற் சீல் செய்யே (௭)

செய்யும் முறையே சொல்லு கிறேந்
சீராய் செந்து ரத்துடனே
வையகந்தி சரி சமனாய்
ஊகா பளச்சாற்று லரைத்து
உய்யும் படியே முன்போலே
ஒரு சட்டியி லிட்டு மேன்மூடி
செய்யு மேலே சீல் செய்து
திறமாய் புடமே போட்டுவைடே (௮

போட்டிட பெருத்த செந்தூரம்
போகும் வெள்ளி நீரடைப்பு
நீட்டுஞ் சோகை பாண்டுவுடன்
நீராம்பலுமே வயிற்று வலி
மூட்டுங் தேனிற் திரிகடுகு
மூன்றே நாளிற் கொடுத்திடவே
வாட்ட மிடாதே கொண்டுவிடு
வாகாஞ் சித்தர் செந்தூர மிதே
(௯)

சாதிலிங்கம் நாலுடனே
சட நாவாரை கரி நாலு
ஆதி இல் யாராக்கி
அதிலே புகட்டு யாருதிரம்
சோதி சுரம்சூல மண்டைக் குத்து
தொடர்ந்து போகும் மேகமெல்லாம்
வாதாய் கெட்ட வோடவிடும்
மகத்தாம் சித்தர் புகையிதுவே
(௧௦)

எருக்கன் வேரை யிளகரைத்து
மயெல் பாய் இலிங்க மதிற் சேர்த்து
மசெ:ரி ரஸமென்ற காய்ந்தெநீது
பதமாய் சங்காரந் தணிற்கூட்டு.
வருத்தமான மூளைவ் கணிடம்
வயற்றிற் கட்டறத் தங்கித்தும்
மருக்கத்துடனே ஓடிவிடும்
மயிலாங் சித்தர் புகையிதுவே. (கக)

—

ஆவாரம் சுரியே காறு
அதினுடன் லிங்கம் மூன்று
தோடொரு வீரம் மொன்று
தேவாதி லிங்க மிரண்டு
தாவதை அரைத்து சங்தான்
தின்னிலே வைத்துக் கொண்டு
போவதே சூலைப்புண்கள்
பொய்யல்ல சித்தர் சொன்னார்.
(கஉ)

—

ஆலத்திப் பூரம் நாலு
அதினுடன் காந்தம் மூன்று
கோலப் பாஷாண மிரண்டு
கொடியதோர் கெவுரி யொன்று
சாலவே கொடுவேலி வேர்
சவ்வீர மரைதான் கூட்டி
மூலமாய் மூன்று கல்லில்
முடித்துக் காயவைத் திடவே (கங)

எடுத்த கல்லி லொன்றாக
மியல்பாம் புளியங் கிராயிற்சுட்டு
வடிப்பமாக புல் முடியில்
வைத்தே தீயிற் புடம்போடு
அரைத்த கல்லி பொடித்தெடுத்து
ஆசனத்திற் பிடித்திடவே
தொடுத்த புண்கள் புரை யெலாம்
சொன்னார் சித்தர் புகையிதுவே
(கச)

தாரமும் ரசமுங் கெந்தி
சரியதாய் தானே செய்து
பாரமாஞ் சீலை தன்னில்
பதிந்துமே திரித்துவிட்டு
வீரமாம் ஏனக்கிற் போட்டு
வெப்பெண்ணெய் தன்னை வார்த்து
கோரமாந் திரி கொளுத்தி
கொடும் புகை முகத்தி லேற்றே (௬௨)

எடுத்திடன் சன்னி தீரும்
யெழும்பிரை கட்டந் தீரும்
பார்த்திடல் பரங்கி தீரும்
பரவை சூலையமுந் தீரும்
கோத்திடல் கண்ட மாலை
தின்மங்கள் ஜெலாய்த் தீரும்
யேத்திடல் வியாதிக் கெல்லாம்
யேழுநாள் பத்திய மாமே. (௬௩)

முற்றிற்று

அண்டக்கல் முப்பூ சுண்ணம்-க௲

ஆதியந்தம் நடுவான சோதிபாதம்
அனாதியையும் நெஞ்சில் வைத்து அடியைப்போற்றி
சோதிமய மானதொரு துரியம் பத்து
துரியத்தி லாடுகின்ற சிவனைப் போற்றி
ஆதிநின்ற மால்பாதம் ஈசன் பாதம்
அருள்பெற்ற மகேசனுடை அடியைப்போற்றி
சோதிமய விந்துவிலே துலங்கும் நாதம்
துரியவெளிப் பதியெனவே தொழுதிட்டேனே

(க)

தொழுதிட்ட பதிகேளுஞ் சொல்வேனப்பா
துரியாதீதங் கடந்து துரியமாகும்
வழுத்திட்ட பொன்னிறமாய்க் காணுங்காணும்
வடிவான அரனாங்கே நிர்த்த மாடும்
செழித்திட்ட மூலத்தின் மேலே யப்பா
முகிழ்ந்து நின்ற சிவனிட வீட்டைப்பாரு
அழுத்திட்டால் அவனென்ன மாட்டே சொல்லும்
அப்பதியை யறிந்து நிற்கக் கருவைக் கேளு

(உ)

கருவேதோ திருவேதோ வென்பா மாண்பர்
கண்டுபதி தெரிசிக்கான் கசட னாகும்
உருவேது வென்றக்கால் விந்து நாதம்
உற்றுப்பார் உன்னுடம்பு வேறு முண்டோ
தருவேது யிதைவிட்டாற் பொருள்தா னேது
தாரணியில் யோகமிதல் ஞான மேது
உருவேது சமரசமே அறிவ தாகும்
உற்றுப்பார் பிறவியற்று ஒளிந்து போமோ

(௫)

போமப்பா யிப்பதியின் கூறு கண்டு
போக்கோடே நிறமறிந்து கருவை வாங்கி
ஆமப்பா யிவராலே வுதித்த தாகும்
அணியணியாய் வுதித்ததுவுங் சிவனாகும்
நாமப்பா கருவிரண்டு பொதுவே யாதி
ஆதியந்த மானதுவும் மிதுவே யாகும்
வேமப்பா வேகாத தலையுமாகும்
விளங்கி நின்ற சாகாத கால்மாமே (௬)

சாகாத காலதுவே யறுகோணந்தான்
தனிவேகாத் தலையதுவே மேலமாகும்
போகாத புனலதுவே பரவெளி தானப்பா
போக்கோடே யிதுமூன்றும் புதுமைமெத்த
போகாத பிரமகற்பங் கல்லுச் சுண்ணம்
புலனுடைய கூறல்லா லொன்று மில்லை
வேகாமல் வெந்துநின்ற சிவக்கா ரந்தான்
வீங்கிய தோர் மாலாகும் விந்து தானே
(௫)

வெந்து நின்ற நிலைகண்டு நாதங் கண்டு
வெளிதானைப் பிரமமென்ற கல்லைக் கண்டு
வெந்துநின்ற நிலையிதுதான் பையா கேளும்
வெறும்வாயை மெல்வதுபோல் சடாதேந்திரான்
வெந்தவிதம் போனவிதம் ரெண்டுங் கண்டால்
மகத்தான சுண்ணக்கல் வெளிய தாகும்
வெந்துநின்ற சிவக்காரங் கட்டு போடே
மேலியே மடுக்கத்தக்கும் வெள்ளிக் கல்லே
(௬)

கல்லென்ற சுண்ணக்கல் காரமெத்த
கலைவெள்ளி யாய்ப்பார்த்து வாங்கி வந்து
சொல்லென்றில் ரவியினுப்பு சுண்ண நீறுஞ்
சுகமான அமுரிபடி யெட்டிற் போட்டு
மெல்லவே கரைத்ததை தெளிய வைத்து
மகத்தான தெளிவெடுத்துப் பாண்டத்திட்டு
நில்லென்ற கல்லுப்பை பாண்டத் திட்டு
நேராக யெரித்திடுவாய் சாமம் நாலே
(௭)

நாலான சாமந்தா னெரித்த பின்பு
நலமான ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
சேலான நாதவுப்பு அதினிற் பாதி
செப்பரிய செயநீரும் நாலுந் தொண்ணூ
மாலான அரன்கார மதனிற் சேர்த்து
மாட்டையிலே யெட்டிலொன்றாய் மாட்டிக் தொண்டு
மேலான கிளிக்கல்லிற் போட்டு மைந்தா
இரவிதனில் வெண்கலவாற் சாமம் மாட்டே
(௮)

சாமந்தா னரைத்தபின்பு வில்லி தட்டி
சாதகமாய் ரவியிலிட்டுக் காய்ந்தபின்பு
ஏமந்தா னச்சுதப்பா யிந்த வில்லி
எடுத்ததொரு வோட்டிலிட்டு சீல்செய்து
ஊமந்தா னருவிற் புடத்தைப் போடு
உத்தமனே புடமாறி யெடுத்துக் கொண்டு
ஓமந்தான் வெடியுப்பு கிரினையாலே
மாட்டுமே யரைத்துவொரு வில்லி செய்யே
(௬)

வில்லிசெய்து சீலமண்ணைச் சாத்திக் கொண்டு
வேண்டியதோர் ஐம்பதுக் கெருவோ போடு
தொல்லியிலே வுருகாதே தொழில் பாரப்பா
சூடாறி யெடுத்துமே கல்வத் திட்டு
எல்லியிலே பூநீறும் வெச்சாரந்தானே
னேத்தியரை நாலிசாம மரைந்து பின்பு
மல்லியிலே பனிமுகத்தில் திரண்டாகமே
மாட்டியரை கில்லுப்பு மீண்ட வாறே.
௧௦

வாரித யெடுத்ததின் ஊசிலி செய்து
மைந்தனே கிக்கிடத்திற் புடமே போடு
பேராக அரவிட் டெடுத்துக் கொண்டு
பேசாதே பூநீரை ஊட்டு அரட்டு
நேராக சாமமட்டு மாட்டமத் தீரு
நிலத்ததொரு ஊசிலியைத்தான் ரவியிற் போடு
கூராக வோட்டில் வைத்து பூநீர்ச் சீலை
கொள்கியே யெண்பதெங் கிள்ளே போடே
(௧௧)

போட்டவுடன் சிவர்ணமதாம் நீரிப் போச்சு
புகழாக யெடுத்ததனைக் கல்வத் திட்டு
அரட்டிப் பின்பு கடுங்கார நீரை விட்டு
அப்பனே அரட்டுவாய் சாமமொன்று
நீட்ட பின்பு அஞ்சுண்ணக் கையில் வைத்து
நேராகப் பூநீரால் சீலை சுத்தி
நீட்ட பின்பு ரவியிலே காயப் போடு
முசியாமல் புடயோட்டில் பூதிப் போடே.
(௧௨)

போட்டபின்பு சுண்ணமென்ன வழலையாச்சு
பொற்பிறவி யுண்டாச்சு பொருளுண்டாச்சு
நீட்டபின்பு அண்டரண்டம் நிறைப் போச்சு
நிலையாத வாதமிப்பால் நிலைக்க லாச்சு
சாட்டபின்பு கன்னியுட னாதத் தாலே
கல்லுப்பே சுண்ணமாய்க் கருவு மாச்சு
கூட்டமதின் துறையறிந்து கூட்டி னக்கால்
குறையாது தங்கவரை வேதை தானே (கரு)

—o—

தானென்ற கல்சுண்ணம் பலந்தான் ரெண்டு
தண்மையுள்ள செயசாரம் பலந்தான் ரெண்டு
ஊனென்ற பூரமொன்று கூட்டிக் கொண்டு
உத்தமனே கல்வத்தி லாட்டு ஆட்டு
வேனென்று பினாகியது குளம்பாய் நிற்கும்
ஏந்தான பீங்கானில் ஊட்டிக் கொண்டு
வானென்ற பனிநீத்தி லிருந்த தண்ணீர்
மைந்தனே வீரமதிற் காச போடே. (கசு)

—o—

போட்டபின்பு செயநீர்தான் வழலையப்பா
புதுமையுள்ள கல்லுப்பை இராவாட்டி
நாட்டுண்டைய வில்லிதட்டி ரவியிற் காய்ந்து
நல்லதொரு அஞ்சு சுண்ணக் குகையிலூது
மூட்டதொரு சுண்ணம்பாம் விரைவ் கூட்டி
முக்கியமுள்ள வாய்வீரம் மத்தித் தேதான்
தாட்டிகமாய் சூடனுக்கு அங்கி பூட்டி
தடையறவே மூன்றுநாள் காய வைத்து
கூட்டுநீ அஞ்சு சுண்ணக் குகையிலூது
கூச்சமில்லை சுண்ணம் பாய்ப் பொருந்தானே

தானென்ற பூநீரைச் செயநீர் பண்ணி (கரு)
தடையறவே சரக்கெல்லாங் கட்டிக் கொல்லு
ஊனென்ற உடலைவிட்டு வெளியைப் பார்த்து
உளமகிழ்ந்து போகாதே உறுத்தச் சொன்னேன்
தேனென்ற மகனே மணியே பூரணந்தான்
இவனொடுங்கிம் பராபரமே கருவ தாகும்
நானென்ற அகம் படைத்தால் தடுத்துப் போகும்
நல்லதொரு கற்சுண்ணத் துப்பு மீறும்
(கசா)

அதிசய சூத்திரம் - உஎ.

ஓமென்ற பூரணமே அகண்ட வீதி
உற்றபரஞ் சோதிவுமை பாதம் போற்றி
வாமென்ற திரிகோணம் வுச்சு வட்டம்
மவுனமென்னும் மோகனத்தாய் வாலை பாதம்
நாமென்றும் பூசை செய்தோம் போகர் சொல்ல
நந்திசொல்ல மூலர்சொல்ல காலாங்கி சொல்ல
ஆமென்று மச்சமுனி சித்தர் போற்ற
அதிசய சூத்திரமாக வரைந்திட் டேனே (க)

அறைந்திட்டேன் சூட்சமாய் வாத ஞானம்
ஆதிபந்த மூலமந்திரஞ் சரக்கு வைப்பு
மறைந்திட்டேன் ஞானந்த எகிகி தானும்
உத்தமனே வெளியாகத் தெரியும் பாரு
பறைந்திட்டேன் தொந்தங்கள் கருவுஞ் சொன்னேன்
பாங்கான சிவசக்தி நடனங் காணும்
நிறைந்திட்டேன் ஐயபதத்தில் சித்து வித்தை
நேரான பொருளெல்லாம் கண்டேன் பாரே.
(உ)

கண்டதொரு சூத்திரமுஞ் சாத்திரமும் பாரு
கருவழியாய்ச் சொல்லார்க ளன்னூல் போல
பண்டதொரு கயிலமுனி தீட்சை உப்பு
பாங்கான நாதமென்று சிமிட்டு வித்தை
விண்டதொரு சூட்சமென்ன சூட்சா சூட்சம்
வேதாந்த மெய்ஞ்ஞானக் கமலத் துள்ளே
வண்டதொரு அமிர்தமுண்ட வாறு போலே
வளமான சரக்கினுட சித்துக் கேளே.

— o — (௫)

சித்தென்ன கருவிடையஞ் சொல்வேன் மக்காள்
செப்பரிது கைபாக மாகத்தானும்
பத்தென்ன பூநீறு நாலு சேரை
பாங்கான அமுரியிலே அன்னம் போட்டு
சித்தென்ன தெளிவிறுத்து காய்ச்சு காய்ச்சு
முறையோடே அஞ்சுதிரங் காச்சி வாங்கி
நித்தென்ன ரவிமுகத்தில் நன்றாய் வைத்து
நேத்தியாய் பழச்சாறு விட்டு ஆட்டே.

(௬)

ஆட்டுவது சாமமொன்று அரைத்து வில்லை
ஆறவே காய்ந்தபின்பு ஓட்டில் வைத்து
மூட்டுவாய் பத்தெருவிற் புடந்தான் போடு
முக்கியமடா சத்தியென்ற குருவி நாகங்
சூட்டுவது சரக்குகளைக் கொல்ல லாச்சு
சொற்பெரிய நவலோக மாதியாகும்
காட்டுவது ஆகாது பாவிகட்கு
கைபாகம் புடபாகம் தெரிந்து தானே (௫)

— o —

தானென்ற முறையொன்று சொல்லக் கேளு
சமுசயங்க ளொன்றுமில்லை வெளியாம் பாடு
வானென்ற சக்கரத்தை உருத்து நன்கும்
வளமான வைப்பு இதை சூட்சா சூட்சம்
தேனென்ற பாறையுப்புக் கொண்டு வந்து
தீத்தமதா லிச்சாற்றைப் பிழிந்து கொண்டு
கோனென்ற சாற்றையிட் டரைத்து வில்லை
கூறியதோ ரவிமுகத்திற் காயப் போடே (௬)

— o —

போட்டுவா நான்மூன்று மிதைய ரைத்து
பொலிந்தங்கே சீலமண்ணும் வறுவாய்ச் செய்து
சூட்டுவது பத்தெருவில் புடந்தான் போடு
சுகமாகப் பற்பத்துக் கியன்றா னச்சு
நாட்டுவது சூட்சமென்ற வதனைச் சொன்னே
னலமாக வதின்பெருமை சொல்லெண் ணே
ஊட்டுவது வேண்டாங்கா ணின்னூற் பாடு
மகத்தான தொழிலப்பர் காணு காணே.

(எ)

—o—

கோணவே பூநீறு களஞ்சி மூன்று
தருதியதோர் பாரையுப்பு பலந்தா னொன்று
பூணவே சூடன்றை களஞ்சி கூட்டி
புகழான சாறு, விட்டு சாமம் மாட்டி
தோணவே வில்லிசெய்து காய வைத்து
சுசியொடு பத்துவெற் புடந்தான் போடு
ஆணவே கொமுய சுன்ன மிப்பூவப்பா
வொருந் தங்கும் வெள்ளாதே காட்சியாமே

(அ)

—o—

காட்சியென்ன வெளியாகச் சொன்னேன் பாரு
சொல்லாதே ஆருக்கு மிந்நூல் தன்னை
கூச்சமென்ன வாதுவஞ்சை செய்வதற்கு
கொடுங்கார ரிப்பூவின் கண்ணும் வாய்த்தால்
தாட்சியென்ன யெதிராளி வகைசொல் லொட்டாச்
சண்டா செருப்பால யடித்துத் தள்ளு
வாச்சதென்ன சரக்கு அறு பத்து நாலும்
வலுவதனைத் தணித்துத் தணியே ஆட்டம் பாரே.

———o———

ஆட்டமென்ன கருவிலொரு களஞ்சி வாங்கி
அப்பனே மிருதாரு சிங்கி கூட்டி
கூட்டமது என்ன சொல்வேன் மெத்த மெத்த
கோலமிட ணசலிட்டு மெண்ணையும் செய்து
வாட்டமென்ற திரோதாயி மயக்கம் விட்டு
வளமாகப் பதவதெரிற்புடம் தான் போடு
நாட்டமென்ற துருசுக்குச் சிங்கி கூட்டி
நல்ல மண்ணுக் செய்துவர்த்தி யெரித்திடாயே
(௫௦)

———o———

எரிப்பென்ன சாமமொன்று வைத்தீதானே
யேங்காதே குருவப்பா சொன்னூர் சித்தி
தரிப்பென்ன விதை விட்டால் வாதமின்போ
சாத்திரமும் சூத்திரமும் பாரு பாரு
நெறிப்பென்ன தவசிருந்தால் பாவம் பாவம்
நேரான பூரணத்தில் சொக்கி நின்றூர்
குறிப்பென்ன விந்தமுறை தப்பா தப்பா
கூறுவே னிணங்கண்ணிக் கூறுவேனே
—— ○ ——
(௧௧)

கூறுவேன் சவ்வீரங் கெந்தி லிங்கம்
குறியான அரிதா மரதங் சாரம்
சேருவது பொரிகாரங், தீணமெல்லாம்
இவைகளா தனித்தனியே யெல்லாமிக்கூம்
ஆறுவது செய்யாதே பாகம் விட்டு
உகைதோணயனைங்கட்டுமே தொந்தம் பாரு
சாருவது சொல்வதென்ன மறந்திடாதே
சகலனேய் எல்லாம் போம் பாரு பாரே.
—— ○ ——
(௧௨)

பாருநீ ஆதார மூல பீடம்
பரிவாக ஆறுமுகத் தேவர் போற்றுஞ்
சாருநீ பிரணவத்தால் நாதன் தன்னைச்
சார்வாக நடுவணையி லாதி யந்தஞ்
சேருநீ ஆயிரத்தெட் டுருவு மோது
சிவனொடு சத்தியங்கே ந~~ண~~ணமாகும்
காருநீ பின்னென்று நினைக்க வேண்டாம்
கருதியதோர் மாயைதனைப் பூசை பண்ணே. (கங)

—o—

பூசையென்ன கணேசனொடு கும்பம் வைத்து
புகழாகச் சிவராத்திரி யன்றைக் கித்தான்
தோசை, யன்னம், பரமானங், கனிகள் டெங்காய்ச்
சொற்பெரிய தூபதீ பங்கள் செய்து
ஆசையென்ன தோத்திரித்து விபூதி தொட்டு
அருடரவென் றேநினைந்து திலதம் போடு
பாசையென்ன ஒன்றுமில்லை யெல்லாஞ் சித்தி
பரப்பிலே உள்ளாதே சொல்லக் கேளே. (கச)

—o—

சொன்னதொரு வகையெல்லா மிண்மை யுண்மை
சொல்லாதே நந்திதரு பாதத் தாணை
நல்லதொரு கோடையிடை தலையில் வீழும்
நாட்டாதே கருவெல்லாம் வெளியாய்த் தோணும்
பன்னதொரு கற்பூர வைப்புச் சொல்வேன்
பாங்கான சூடனைப் பலந்தான் வாங்கி
கன்னதொரு சாம்பிராணி வயிரடமாகக்
கார்பலந்தான் வெடியுப்புக் கலசியொன்று (௧௫)

— o —

ஒன்றாகச் சேர்த்தரைப்பா யண்ட கீழ்
ஓகோகோ உல்லிசெய்து ரவையிற் போடு
பன்றாக பிங்கானில் வைத்துக் கொண்டு
பானிரெண்டு ஒன்றின்மே லொன்றாக் கின்தான்
நன்றாக வெள்ளைக்குத் திக்கம் பூசி
நாலுவிரல் பொருமணல் அடுக்கி விட்டு
மொன்றாகச் சந்துவாய்ச் சீலசெய்து
முக்கியமடா ஆதியென்ற வனலை மூட்டே. (௧௬)

— o —

நீட்டப்பா சாமகீமான்று கமலம் போல
முக்கியமடா ஆதியென்ற மூல மோது
பூட்டப்பா திறந்துபார் மேற்றூ இங்கிள்ளே
புகழான பச்சைக் கற்பூர மாகும்
கீட்டப்பா வாசனைதா னென்ன சொல்வேன்
கிருண்டே யிந்தவித்தை ஆருஞ் சொல்லார்
ஆட்டப்பா வேணமட்டும் செய்து கொள்ளு
அதிசயந்தான் கோடான கோடி தானே.
(கள)

—— o ——

தாணைன காயவைப்பு சொல்லக் கேளு
சதகோடி பொருளிதற்கு மொவ்வா தப்பா
மாணைன சிவகாமி சொன்னேன் பாரு
வகைதோண சிவமூலி படிச்சா ரொன்று
ஊணைன வேம்பினுடை குழிகை யுள்ளி
அற்றதொரு சக்கிலத்து கூட்டி யாட்ட
வேணைன யிரண்டைச்சார் கத்தி தாளிம்
ஓதைமறிந்து காச்சியெடு யெண்ணெய் விட்டு
(கஅ)

—— o ——

ஊட்டதொரு கருநெண்ணெய் சதுரக்கள்ளிப் பால்
வீறதை வார்த்தரைத்து தோலிற் கட்டி
பட்டதொரு நெற்கிவையி னடுவே வைத்து
பாங்காக யாருணாட்சென் றெடுத்துப் பாரு
தொட்டதொரு வாசமப்பா மேதி யாகும்
சொல்லாதே கிவையெல்லாம் சொன்னேற் பேசும்
கெட்டதொரு மனமானால் செத்துப் போவாய்
கெடாதவண்ண மானதுவு மெண்மை யாமே. (கக)

உண்மையாய்க் கூறதனைச் சொல்லக் கேளு
லோகோகோ நாலிதோறும் கருவைச் சொல்லார்
நன்மையா யார்காணப் போரா ரையா
நாட்டிலுள்ள வாதிகளோ காணப் போரார்
தன்மையா யுங்கினத்துக் காதி காரம்
சாற்றரிது குருவுக்கு வீர மாதி
பண்மையாஞ் செயநீர்க்கு சாரமாதி
பாங்கான களங்கிக்குத் தாரமாமே 20

ஆமப்பா செகப்புக்கு கெந்தி யாதி
அஞ்ஞான பொருளுக்கு சூத மாதி
ஓமப்பா பனங்கண்டு தொந்தம் பாரு
ஒப்பில்லி நவலோக மெல்லாம் நீறும்
தாமப்பா ஆதிகுரு கண்டு பார்க்கு
சதாகோடி சங்கவரைத் தாண்டி போமே
ஊமப்பா லோகருக் காகாது சொன்னேன்
மகத்தான ஆனந்த லகிரி கேளே.

(உக)

ஆனந்த லகிரிபொரு டன்னைக் கேளு
அதிமதுரம், திரிகடுகி மாஞ்சி யேலம்
தானந்த காமப்பூ அரத்தை நெல்லி
தானிசந் கொத்தமல்லி யபண்கிரும்பு
தானந்தக் கசகசா, கிந்தரிக்கஞ் சூரி
சமைக மிதண்டம் நாலி லொன்று
கோனந்த சரக்குவகை மீலி ரெட்டி
கூட்டிவறுத் தரைத்திடவே தேனெய் யாமே

(22)

ஆமென்ற மௌனவு கொண்ட போது
அண்டங்கள் தோற்றமோ அறிவுண் டாகும்
தாமென்றவினை பிணிகள் கன்மந் தீரும்
சதாகோடி ஆனந்த சித்துண் டாகும்
ஓமென்ற மெய்ஞான பீடந் தோன்றும்
முன்னே அமுதங்க ளூட்டும் பாரு
வேமென்ன சிவதவமா மோகனத்தில்
ஊங்கியதோர் ஹஸ்துவினற் சக்கர மொன்றுமே
(உ௩)

—o—

என்னை உல்த்துவந் தன்னைக் கின்னே
உத்தமனே இக்கமதாய் ஹந்தில் நிற்கும்
பண்ணென நவக்கிரகந் தன்னைக் கின்னே
பாங்காகத் திரிகோண வட்ட மட்டு
கண்ணென என்றுமுத லஞ்ச வீடு
காட்டாக நமசிவய வென்று போடு
உண்ணென யெமன் வரினும் எதிர்க்க மாட்டான்
வேதாந்த சக்கரந்தான் ஆட்டுங் காணே.
(உ௪)

—o—

காணவே யின்னமொரு கூறு வுண்மை
காட்டுகிறேன் குருவென்ன மக்காள் மக்காள்
பூணவே வெகுசுருக்கு கக்கிஷமாம் வித்தை
புகழான மூலமதை யாகார மிட்டு
தோணவே யிட்டதனில் அச்சரங்கள் பாரு
தொடுமுன்னே பஞ்சிலேவைத்த பொறிபோலாகும்
ஊணவே மற்றதெல்லா கிரிகை மார்க்கம்
உள்ளாதே யெவருக்கும் வகையாய்த் தானே (௨௫)

—o—

வகையான வித்தையொன்று சொல்லக் கேளு
மார்க்கமென்ன அரிதாரங் கெந்தி லிங்கம்
சிகையான வெள்ளைக் கௌரீசங் கார்கோலி
செப்பரிய இஞ்சியோடு இந்திர மூலம்
பகையான மனோசிலையும் பரங்கிப் பட்டை
பாங்காக வொன்றாக வரைத்துக் கொண்டு
துகையான நல்லெண்ணெய் தன்னிற் காய்ச்சி
சேறுபோல் பதத்திருந்துக் கொள்ளு வாயே. (௨௬)

ஊாயான புண்புரைகள் கரப்பான் கிட்டம்

மகத்தான கிரந்தியொடு பறங்கி நீங்கும்

தாயார்தன் வயிற்றிருந்து பிறந்த ரூபம்

தப்பாது வசீகரமாஞ் சொன்னேன் பாரு

காயான ஐங்கோல மித்த வித்தை

கருவான மாந்திரீக மெல்லாஞ் சித்தி

தாயான யோகமது சித்தி யாகும்

தாரணியிற் புகழ்பெற்று தெந்த வாய்ப்

பாயான கூடுவிட்டு கூடு பாயும்

பாங்கான அதிசய சூத்திரந் தான் முற்றே

—— ௦ முற்றிற்று. (௨௭)

உகார சூத்திரம் - ௧௦

காணப்பா ஏரியிலே வளர்ந்த பிண்டம்

கடிதான மாங்கிஷந் தோ டெடுத்து வந்து

பூணப்பா பொரிகாரம் பொருந்தக் கொண்டு

பிண்டத்தை வாய்பிளந்து வதனிற் போடு

ஆணப்பா பெண்ணுட னே கூடுந்தொழிற்போல்

லப்பனே நாதந்தா னிறங்கும் பாரு

காணப்பா லோகத்தான் சட்டி யொன்று

சாதகமா யிணங் கன்ய மதனுட் போட... (௧)

போட்டுநீ யடுப்பிலே தீயை மூட்டி
போதவே போடாதே யெரிங்காய்ப் போகு
தேட்டமென யிதைவிட்டார் தேட்டமுண்டோ
சலம்போலே யுருகிநிற்கும் பருவம் பார்த்து
வாட்டமிலா நாதநீர் குத்திக் குத்தி
வுண்மைபெற யுருமிட்டு மடிப்பில் வைத்து
நாட்டிலுள்ளோர் காணமல் மறைவில் வைத்து
நன்றாகக் குளிர்ந்தபின்பு யெடுத்து வையே (௨)

— o —

வைத்தபின்பு சாரத்தில் கவசம் போடு
மைந்தாநாள் காய்ந்தபின்பு வாட்டு வாட்டு
கொத்துவிட வொண்ணாது சாரந்தானப்பா
கொடுமையாய் கட்டுமடா சாரந் தானும்
பத்தியா யெடுத்துவந்து ஆத்தாள் பூசை
யப்பனே வடுகனுக்கும் பூசை பண்ணு
சேர்த்தரைக்க வழிசொல்வேன் சாரமொன்று
செப்புகிறேன் வெடியுப்பைத் திடையுந் தானே (௫)

— o —

தாணக வரைத்துவைக்க செயநீ ராச்சு
தப்பாமல் வீரத்தை துவைத்து வாட்டு
பூணன மெழுகுபோல் மெழுகு மாகும்
முத்தமனே பித்தளை வெள்ளியிலே தாக்கு
மாணன ஒழியுமையாள் சொன்ன விதத்தை
மயக்கமில்லை தப்பாது வயது பத்து
நாணன மனோன்மணிக்கே தெரியுமல்லால்
நாட்டிலில்லை யிந்தவித்தை மெழுகு தானே. (௪)

—o—

மெழுகைஇத்து தங்கத்தில் பொதிய வேண்டும்
முறையோடே அதொர மஞ்சாடி கூட்டு
பழுதில்லை தங்கமென்ன சுண்ண மாகும்
பதையாம லோகமெல்லாம் பழுத்தே போகும்
முழுதுண்ண வேணுமோ யிதுபோ தாதோ
உத்தமனே துரிசுதான் நீற்ற வெண்ணெய்
புழுகோடு நீணமுடன் வீரங் கூட்டு.
புகையடங்கக் கட்டியதோர் சாரங் கூட்டு (௫)

—o—

கூட்டியே யிணங்கனியும் கூடக் கூட்டி
இளம்பாக வரைப்பதற் கெங்கம்/பால்விட்
டாட்டியிதை மயனம்போற் றரிசுக் கம்பி
யப்பனே மூன்றுநாள் ரவியிற் போடு
ஊட்டியதை கவசித்து புடத்திற் போடு
ஓகோகோ துரிசெவன்றே யுறுதி யாகும்
பாட்டிலே படித்ததுபோல் நினைக்க வேண்டாம்
பழிகொண்ட சுண்ணம்பு பாயுந் தானே.

(சா)

—— ○ ——

தானென்ற துரிசுக் கொப்பு முண்டோ
தாரணியிற் செப்பாரே மேட வாதி
கானென்ற சரக்கையெல்லாம் கூணத்தில் கொல்லும்
கைகண்ட சுண்ணம்பு கபடோயில்லை
வானென்ற வேதையிதிற் றெந்தங் கோடி
வைத்தைந்த சேயநீரற் செம்பைச் சாய்க்க.
மோனென்ற செம்பதுதான் கட்டிப் போச்சு
முறைகோடி கவர் கோடி மீட்டுமீட்டே

(ஏ)

—— ○ ——

மூட்டுதற்கு செம்புதன்னைத் தகடாய்த் தட்டி
முன்சொன்ன மெழுகுமரி தாரங் கூட்டி
யாட்டுதற்குப் பழச்சாற்றுர் கெந்தி கூட்டி
யழகான தகட்டுக்குப் பூசி வாட்டு
வாட்டுதற்கு உமியோட்டிற் சுருள வாட்டு
வளமான குக்கிடத்தில் மாண்டு போகும்
தேருதற்கு செயமான சிகப்பு மெத்த
சித்தர்செய்த செந்தூரந் தின்னு தின்னே.(௮)

தின்னுவந்தால் வயதுசொல்ல முடியா தப்பா
செம்புவண்ணம் பஞ்சவண்ண மாகத் தோன்றும்
பண்ணுதமிழ் கோடான கோடி பாடும்
பரைவாசல் சிவவாச லிரண்டுங் காணும்
முன்னரிய மோனவெளி தோணுந் தோணும்
ஓகோகோ கெவனசித்து யுயர்ந்து போகும்
அன்னபல னருந்துமங்கே மலமுஞ் சாகும்
அப்பனே மீதண்ட சித்தாட லாமே

(௯)

ஆடலா மிதுகொண்டு கோடா கோடி
அளவிறந்த வித்தையெல்லா மிதற்குள்ளாச்சு
ஓடலா மிதினாலே குளிகை செய்து
உயர்த்தியுள்ள மலைகளெல்லா மேறிப் பார்க்க.
நாடெல்லாந் திரிந்தாலு மிந்தப் போக்கு
நல்லமுறை யிதுபோல யெங்கு மில்லை
பாடற்போற் சொன்னதென் றெண்ண வேண்டாம்
பத்துமே சூத்திரமாய்ப் படித்தேன் முற்றே.
(௧௦)

முற்றிற்று

பாலவாகடம்-20

பூரணமே குருவாகத் தன்னைப் போற்றி
பேதரவா மறிவுடனே யிருந்து பாரு
காரணமாம் வாயுவினால் ரசங்க ளாகி
கனமான ரசமதுதான் சுரோணி தங்களாகி
தாரணமாய் சுரோணிதம் சுக்கிலங்க ளாகி
தழைத்துதப்பா வுலகத்தில் தையல் தேடி
வாரணியும் கொங்கைமேல் மின்னாள் வந்து
மகிழ்ந்திருந்து வொருமணியாய் வாங்கி னாளே
(௧)

வாங்கினன் வைத்திருக்க யிடமெங் கேது
மயிர்நுனிபோல் சுழியுண்டு யதிலே நிக்கி
தேங்கினன் நாதவிந்தா யிரண்டுங் கூடி
திரண்டுதப்பா குமிழ்போலே பிண்ட மாச்சு
தாங்கினன் மிகுந்தாசை சிகாரங் கொண்டு
சுகித்திருந்தாள் சன்னத்தா லினிப்பி னாலே
வேங்கினள் புசிப்பதற்கும் பிணிப்ப தற்கும்
யிதமான வகைபொருந்தா லினிப்பாய்த் தானே. (௨)

———— ○ ————

புசிப்பதனால் வாசந்தான் பித்தம் பொங்கி
புகழாக பிண்டத்தை வளாந்து தப்பா
பசியினால் சூடேறி நீர நிந்தி
பகையான சேற்றுமந் தானு மாகி
கழிப்பதனால் மூவருமே கூடிக் கொண்டு
கருவோடே உயிராதியுமே கலந்து போச்சு
ருசிப்பதனால் மன்னாளுஞ் சென்ற பின்பு
மேதண்ட லோகத்தி லுதித்த வாரே.. (௩)

———— ○ ————

உதித்ததொரு பிள்ளைக்கு வியாதி கண்டால்
உண்மையுடன் சொல்லுகிறேன் தன்மையாக
பதித்திருக்கும் நாடிகளைப் பார்க்கும் போது
பரிவுடனே தோணுமற் கலங்கிப் போகும்
கதித்திருக்கும் இணங்களைத்தான் சொல்லக் கேளு
கருவுடனே கிரந்தியுட னிரண்டும் பாரு
மதித்ததொரு கரப்பானும் கனக வேம்பு
வணசமது போலுமல்லோ வங்கியாரே. (௪)

வங்கியரே கருவாலே யாய்ந்து பாரு
வண்மையுடன் வாயுவந்து குடலைப் பற்றி
மங்கியே மலஞ்சிக்கக் கொண்டு
மிகுந்தசல மலமிரண்டும் கட்டிக் கொண்டு
அங்கியே அலறியுமே தேங்கித் தேங்கி
யன்னையென்று மிகுதிபெறத் தேடுமப்பா
உங்கியது உண்ணுது மிரண்டு பார்க்கும்
உளமாந்தக் கிணமிதுவென் றகந்து கொள்ளே
(௫)

கொள்ளடா வியாதியென்றல் கொஞ்சமல்ல
கொடுங்கார மேற்றதற்கு வகையைக் கேளு
உள்ளடா நிலவேம்பு சிவயோகி வேரும்
உரைவான நிம்மைவேர் உள்ளி காயம்
கள்ளமல்ல வொன்றுக்கு கழஞ்சு சேர்த்து
கருத்துறவே யெண்ணெய் அரைப்படியில் வெந்து
உள்ளதொரு காசிடையாய் உள்ளே வாரு
வொருமித்த உளமாந்தை யோடிப் போமே.
(௬)

ஓடிப்போம் மலபேதி நீரைப் போலே
வொருநிறமா யிறக்காது பின்பு தேகங்
தேடியே திகைத்ததுபோல் தொங்கிக் கொண்டு
இவ்விதிகள் மேனேக்காய்ச் சொக்கிக் கொள்ளும்
வாடியதோர் அன்னிமகம் பாராதப்பா
மைந்தனே சலமாந்தம் மலத்தில் காணும்
நாடியதோ ஈராட்சதனுஞ் சிறையில் வைத்து
நல்லியல்பு மீரட்டியும் நம்பிப் பாரே.
(௭)

நம்புவது வெதுப்படக்கிக் காய்க்கு மல்லி
நாவிலியுங் சமனதகச் சாறு வாங்கி
வெம்பியதோர் வேல்வழியாள் மீதுரையும் வேரு
வியாசன்சொல் யோகிக்கு நிரைப்ப தான
துன்பமற நாக்கிடுவாய் கழஞ்சு விதம்
தூக்கிடுசேர் வெண்ணெயிற்சார் சமனச் சேர்த்து
தென்புடனே யெரியிடுவாய் மெழுகு தாகத்
தினமுமொரு காசிடையாய்க் குலிக்கி டாயே
(அ)

— o —

குலிக்கிடுவாய் மூலப்பாலில் மூன்று நாள்தான்
கூப்பிட்டே யோடிவிடுஞ் சலமாங் தங்கள்
அலக்கமறும் மின்னாமாங் துளிர்போ லாகும்
மதைவிட்டு மின்னமொடு அடவு கேளு
கலக்கமற்ற திப்பிலியும் முனைத்தாளும்
கணமான மிந்திலியின் மட்டவியில் வைத்து
நலக்காமல் திரிபொழுது வார்ப்பா யப்பா
நாடிவந்த சலமாந்தம் நீங்கிப் போகும்
(கூ)

நாடியதோர் பித்தமது கோபங் கொண்டு
நல்லவாயுவைப் பற்றி யழுந்திக் கொள்ளும்
கடித்திருந்த பின்கிக்கிக் கதித்த சூடும்
கனகனப்பு மெண்ணோரங் கைவிடாது
ஓங்கியே வாயுலர்ந்து தண்ணீர் கேட்கும்
முத்தமனே மலபேதி வழும்பாய் வீழ்கும்
மடங்கியே ஊண் கமுகீர்போ லபான வாசல்
மாளாதே யெப்போது வருகும் பாரே. (௧௦)

———— o ————

பாருநீ யிக்குணத்தால் குணங்க ளென்று
பருவமாய் கண்டறிநீ புத்திரனே ஐயா
சாருதற்கு இனிவேருஞ் சிந்தூர பாகு
சாந்தகுக்கன் காந்திவேர் பொன்னப் பூவேர்
போரரசன் மதிமயக்கம் பூண்ட வேருடம்
போதவாய் பட்ட வகை பலமே தாக்கி
மீறியதோர் மொழுகதுபோ லெண்ணெ யிற்வெ
வெந்தபின்பு பீங்கானில் எடுத்து வையே.
(௧௧)

திருத்திட்ட எண்ணெய்க்கிப் பொடியைச் சொல்வேன்
யேலஞ்சீ ரகமதுதான் பலமே வாங்கி
வறுத்திடித்துப் பொடித்திடுவாய் மயிணம் போலே
வாரியெண் ணெயில்தூவி குலுக்கி வைப்பாய்
நிறுத்துவொரு காசிடையாய் மூன்று நாள்தான்
நேராக முலைப்பாலைக் கரந்து வாரு
துறத்திவிடு மபானத்தால் சொரிந்த ரத்தந்
தொத்தினதோர் குணங்களெல்லாந் துரந்து போமே

(கஉ)

துரப்புமிகுங் கக்கலுடன் சுவாசந் தோற்றுந்
தூக்கமது பிடியாது தொத்திக் காயும்
யெரப்புடனே விக்கலுடன் உளாவுங் பள்ளம்
யேந்துகொங்கை பிடையாது வீங்கிப் போனால்
வெறுப்பார்கள் இருவருமே யினியே தென்பார்
வேறேநீ மனந்தவிக்க வேண்டாமப்பா
உரப்பான குணங்களிது தானுங் கண்டால்
ஓகோகோ சுழிமாந்த மென்று சொல்லு

(கங)

சொல்லுதற்கு சாவதுளாய் தொடரும் தும்பி
தொகைகும்பிட் டடியுடனே கிரிக்கு நாதர்
வல்லியுடன் சிட்டியுமே நறுந்தை கூட்டி
வாகான மிளகளைல்லாம் சாறு வாங்கி
சொல்லுமே சாதிக்காய் திப்பிலியுங் காயம்
சொல்கடுகு ரோகணிகோ ரோசனையுங் கூட்டி
நல்லகம லாக்கினியல் மெழுகு தாக்கி
நசுகவின காசிடையாய் நாட்டி டாயே
(௧௪)

நாடியே யஸ்தியிலே சூடு கொண்டு
கல்லுடம்பின் மேற்குணந்து சிரங்கள் காயும்
ஓடியதோர் சுவாசத்தால் அனல்பு டைக்கும்
உதடுகளும் வெடித்துவாய் புண்ணாகும் நெஞ்சு
தேடியன்னி யமுகைவப்பா துயர மெத்த
தேம்பிவாய் திறப்பதற்கு வருந்த மென்ன
வாடுமே இருவனுக்குத் தேகமெல்லாம்
வெளுப்புடனே பேதியாக கிரமாந்த மென்றே
(௧௫)

மாந்தமிது காணில்முன் குமரிச் சார்சேர்
வாங்குவது எண்ணெய்சேர் உள்ளி சாரும்
சேந்தீங் காறைவல துத்தி யோர்த்தோல்
செய்மெழுகு போலரைப்பாய் பலம தாக
வாய்ந்ததொரு வெந்தயமும் பலம தாக
வறுத்தரைத்து ஏகமாய்க் கலக்கிக் கொண்டு
சாந்தமாய்த் தீயெரித்து மெழுகு தாக்கி
சாதகமாய்ப் புண்வாய்க்கித் தாக்கி டாயே
(௧௬)

தாக்கிடுவாய் முன்போல மூன்று நாள்தான்
தடவிவிடுப் புண்தூடு தணிந்து போகும்
தொக்கிடுமே மலபேதி பச்சென் றேதான்
தோய்ந்ததயிர் போல்நிறமாய் வயிறு வப்பி
துக்கமிகும் பாலருந்தும் கக்கிங் காயும்
சொருகிவிழிக் கால்கைகள் இல்லிட் டேகும்
எக்கயிலே தவமிறட்டல் குணங்கள் கண்டால்
இயலான மிறகளையென் றியம்பி னேமே
(௧௭)

இயம்பாறை கோழிக்றை சனகி வேளி
யிலவைதும்பை மிரட்டுமிலி யிதைகா வுள்ள
சுயமாக யிலிகளையெல்லாங் சாகு வாங்கி
சூட்டதிலே யெண்ணெய்சார் சமன தாக,
வயமுள்ளி கரியவணி ரிஜிமுலந்தான்
வகைக்கழுங்கி சேர்த்திட்டுத் தியை மூட்டு
நயம் பாகும் முன்போலே காதைடையே வாரு
நாள்மூன்றில் மிறகளியும் நாடா நோகும்
(கஅ)

ஓடுமப்பா வாயுவென்ற நாற்பத் தெட்டு
முடலெங்கும் கினகனத்துச் சூடுண் டாகும்
நாடுமே கதைகளெல்லாங் கிலிங்கிக் காட்டும்
நல்முழிகால் கைகள்பதை பதைக்கு மப்பா
தேடுநீ பாருதனை மாந்தை யென்று
செல்வனே வாதநீர் கலந்து கொண்டு
பாடுதற்கு வாயவிலித் தாகிப் பற்றும்
பருத்துடம்பு யிரும்பதுபோல் திரேகங் காயும்
கூடுமே யசைந்தசைந்து அலிக்கி மப்பா
கோமகனேகள் ளிமாந்தையுட கொடுமை தானே
(கக)

கொடுமையென்று சொல்லாதே வலிகட் கெல்லாம்
கோதலித்து நாரண்டின் வேம்பின் பட்டை
தடுமையில்லா காற்றுகையின் கிழங்கு மின்னி
தருதெருடன் தவசுவேர் சிவதேவிவேர்
படுமைபடா இத்தண்ட முசுரண் டங்கள்
பதமான நெய்கள்வகை பதமே தாக்கு
கடுமையுள்ள மிட் டிக்காய் சாறு நாழி
கன வேம்பின் கியாழ மது நாழி கூட்டே
(20)

கூட்டிடவாய் வெள்ளிச்சாரணை வேர் கொத்தான்
கோதையரே யேழுவகை யிரண்டதாக
எட்டுநறும் ஆமணக் கெண்ணெய் நாழி சேர்த்து
மேலஞ்சீ ரகமிரண்டு கடுகு ரோகணி
காய்த்திட்டு வகை பலமிரண்டு பொடித்துப் போட்டு
தணலெரித்து மெழுகாக்கிக் காசெடையே வாங்கு
முட்டோடே யிடுவதும் வலியைந் துந்தான்
மூன்றுநாள் பத்தியமாய் முனைந்து நேரே
(21)

முற்றிற்று

ஊத்துமுறை — உ௫

பாரப்பா ஊத்துமுறை வகையைக் கேளு
பக்குவமா யுருக்குமுறை துரித்தி யொன்று
சேரப்பா சத்துவகை துரித்தி நாலு
செயமான நீற்றுமோ ரெட்டு மைந்தா
தேர்ப்பா வரணவகை உபர சங்கள்
செய்மார்க்கங் கிருவென்னி லறிந்து கொண்டு
சேரப்பா குருமுடித்து செந்தூ ரித்து
சிவ சிவா கேசரியை தினமு நோக்கே (௧)

— o —

நோக்கடா ஐப்பசிமுதல் மூன்று மாதம்
நுண்மையுடன் உருக்கினத்துக் காலமாகும்
வாக்கடா தைமுதலாய் மூன்று மாதம்
மகத்தான செயநீர்க்குக் காலமாகும்
தாக்கடா சித்திரைமுதல் மூன்று மாதம்
சங்கையுடன் குருமுடிக்குங் காலமாகும்
தூக்கடா ஆடிமுதல் மூன்று மாதஞ்
சுத்தமுடன் திராவகஞ் செந்தூரஞ் செய்யே (௨)

— o —

சிற்றினம்

செய்யப்பா சிற்றினத்தின் சுருவைக் கேளு
சிவசிவா புனுகுராசு வீரம் பூரம்
மெய்யப்பா திருவண்டு சூதந் தாரம்
உத்தமான கார்முகிலுங் சவுக்கார முதலும்
செய்யப்பா சற்குருவை யென்பதிலு மைந்தா
திருவான நவலோகம் சிறிப் போகும்
கையப்பா கைமுறையா யறிந்தா யானால்
கசடற்று வேதைமுறை காண லாமே
(ரு)

உருக்கினம்

காணவே உருக்கினத்துச் சரக்கைக் கேளு
வெங்காரமுடன் சவ்வாது வெடிச்சாரம் உப்பு
பேணவே கண்டறொட்டு மால்தேவி வெள்ளீ
பூவமான நெய்குடனே ஆமணக்கு குன்றி
தோணவே தேனுடனே புகை னைச்சம்
தொகுத்தறிந்து கமொனங் கண்டா யானால்
ஊணவே நவலோகம் உருகிப் போகு
முத்தமனே கண்டறிந்து யோகங் காணே
(சு)

நவலோக உபரசங்கள்

காணவே நவலோக உபரசங்கள்
கட்டுதான பாஷாண வகைகட் கெல்லாம்
பேணவே செந்தூரஞ் செய்ய நல்ல
மூலமான சரக்குவகை சொல்லக் கேளு
தோணவே மனோசிலை தாரங் கெந்தி
சுத்தமுள்ள அப்பிரகங் கெவுரி துத்தம்
பூணவே வெடியுப்பு யிதுவெல் லாந்தான்
புத்தியுடன் செந்தூரத்தின் கருவாம் பாரு (௫)

வரணவகைச் சரக்கு

பாரப்பா வரணவகைச் சரக்கைக் கேளும்
பரிவான தங்கமொடு நாகஞ் சூதம்
நேரப்பா கிமிளியொடு கெந்தி யுப்பு
நேரறிந்து கைபாக முறையாய்ப் பார்த்தால்
பேரப்பா எடுத்ததொரு நவலோ கங்கள்
மூலமான வகார வகைக்கிதுவே யாகும்
சாரப்பா சற்குருவின் பாதங் கண்டு
சிங்கையுடன் சவுமியசா கரத்தைப் பாரு
(௬)

சூதம்

பாரடா சற்குருவின் கடாட்சத் தாலே
பதிவாகக் கட்டியதோர் சூதந் தன்னில்
நேரடா காரியஞ் சரியாய்க் கூட்டி
நேர்மையுட னெலிலொன்று தங்கஞ் சேர்த்து
தீரடா கெந்தியுமே நாலி லொன்று
செம்மையுடன் சூதமெட்டி லொன்ற தாகும்
சேரடா பொடியாக்கி கிப்பிங் கேத்தி
சிவசிவா வாலுகையின் மேலே வைத்தே

(௭)

வத்திநன்றாய்த் தீமூட்டி மைந்தா நீதான்
இன்பமுடன் பதம்பார்த்து செந்தூ ரித்து
போற்றியே நவலோக நூற்றுக் கொன்று
பூட்டடா பன்னிரண்டு மாத்து மாகும்
பார்த்திபனே வேறுவகைச் சூதந் தானும்
பரிவாகப் பலமெட்டை யெடுத்துக் கொண்டு
சாத்தியதோர் தங்கமொரு பலமுங் கூட்டி
சங்கையுடன் தெளிவாக உருக்கிப் பாரு

பாரப்பா உக்கிரத்தைப் பொடியாய்ச் செய்து
பார்த்திபனே பதினாறு பலந்தான் கெந்தி
நேரப்பா பொடிசெய்து கூட்டி நீயும்
நேர்மையுடன் கிப்பியிலே நிறையச் சேர்த்து
சேரப்பா வாலுகையி லேத்தி மைந்தா
தீர்க்கமுடன் பதம்பார்த்து செந்தூரித்து
காரப்பா யிதையெடுத்து நூற்றுக் கொன்று
காட்டவே நவலோகங் கனக மாகுமே
(௯)

ஆமப்பா யிதின்பேர்தான் வாக்ஷ சந்திரன்
அரகரா இன்றியிடு நேரங் கொண்டா
காமப்பா மண்டலந்தான் கொண்டா(யானால்
கலைமதிபோற் றேகமது காந்தி யாகும்
போமப்பா சட்டையது உரிந்து போகும்
பூரணமாய் கண்ணிரண்டும் ஒளிவாய் நிற்கும்
தோமப்பா உடம்புநீ வாலை யாகும்
சுத்தமுள்ள கற்பமடா யிந்த மார்க்கம்
போமப்பா உன்பேர்க்குச் சோதிகாணும்
பேர்பெரிய வேதாந்த சித்த ராமே (௧௦)

உபரசசத்து

சித்தமுடன் உபரசத்தின் சத்துச் சொல்வேன்
செயமான நவச்சாரம் வீராகனிரண்டு
பத்தியுள்ள வீரமது வீராகனிரண்டு
பதிவான அண்டத்தின் தம்பலமோ பத்து
புத்தியுடன் அண்டகிர் ஒட்டு ஆட்டி
பூரமாய் குகையிலிட்டு ஊதச் சத்தாம்
வெற்றியுள்ள சத்துத்தா னாகம் போலே
வேகமுடை யுருகுமதைக் கண்டு பாரே.
(கக)

துத்தசத்து

பாரப்பா துத்தசத்து வேதை சொல்வேன்
பாசிதெல் சந்தான தா/தீபம்
நேரப்பா சூதத்தைச் சமனதாக
நேர்மையுடன் / கூட்டி நன்றாய் / யுருக்கிப்பாரு
காரப்பா நாலிலொன்று தங்கம் சேர்த்து
கருணையுடன் உருக்கியதை மணியாய் வாங்கி
தேரப்பா அந்திடைக்கி கெந்தி சேர்த்து
சிவசிவா பொடிசெய்து கிப்பிக் கேத்தே
(கஉ)

ஏத்திநன்றாய் வாலுகையி லங்கி பூட்ட
யெடுத்துநீ சிவந்தான பதமும் பார்த்து
போற்றிநன்றாய் நவலோக நூற்றுக் கொன்று
பூட்டிடுநற் பதினாறு மாத்து மாகும்
மாற்றிநன்றாய் விரமிட்டுச் செந்தூ ரித்து
மகத்தான சூதமிட் டரைத்துக் கொண்டு
தோற்றியதோர் தூசியிட்டு திருத்தத் தானே
சுத்தமுள்ள கிர்தனிலே துவைத் திடாயே
(௧௩)

துவைத்ததொரு திரியைத்து தீப மேற்றி
சூழவே குடிதாசி கூடு கட்டிப்
பலித்ததொரு நவலோகத் தகட்டுக் கேதான்
பத்தியதோர் திரியவித்து தாபஞ் சாடில்
தவித்ததொரு தகடெல்லாங் கருத்துப் போகும்
தண்மையுடன் தணல்காட்டத் தங்க மாகும்
செவித்ததொரு தாம்பிரமாம் வேதை மார்க்கம்
சிரேட்டமுள்ள மாணாக்காள் கண்டு கொள்ளே
(௧௪)

காந்த சத்து

கண்டுபார் காந்தமது பலந்தா னென்று
கட்டியதோர் சாரமது பலந்தா னொந்து
உண்டுபார் சவ்வீரம் பலந்தா னொந்து
வெற்றியுள்ள வெண்காரஞ் சமனாய்ப் போடு
கொண்டதொரு சிப்பியிலிட் டேதானுங்
குறியாகத் தானுருட்டிக் கையில் வைத்து
சென்றிடவே செப்பிலிட் டூக்கிப் பாரு
சிவசிவா நாகம்போற் சத்துப் பாரே.
(௧௬)

பாரப்பா நாகம்போற் காந்த மானல்
பதிவாக காயசித்தி யோக சித்தி
நேரப்பா கண்டிடைக்கி ரசமுங் கூட்டி
நிசமான சதத்திடைக்கித் தங்கங் கூட்டி
சேரப்பா தானுருக்கி மணியாய் வாங்கி
தீர்க்கமுள்ள கெந்தகமுஞ் சமனாய்ச் செய்து
காரப்பா பொடிசெய்து குப்பிக் கேற்றி
கருணையுடன் வாலுகையிற் றீயை மூட்டே.
(௧௭)

மூட்டமென்றுஞ் செந்தூரப் பதத்தைப் பாரு
மோசங்கள் வாராமல் சீலைதை போட்டு
நீட்டியதோர் சீலைதனை காய்ப்பு கண்டால்
நிலைத்ததொரு செந்தூரம் பதமாச் சென்று
பூட்டியதோர் மெஞ்ஞானியும் பூசை செய்து
புகழாகக் கிடைத்தபின் மரக்கிப் பாரு
ஆட்டியதோர் அணையைப் போல வாகும்
அந்திசந்தி யிரண்டுக்குந் தின்னு தின்னே
(௧௭)

———— o ————

தின்னடா மண்டலத்தில் காய/சித்தி
இருசிவா அருணைப்போற் றேகமாகும்
கண்ணடா சோதிவிடு காந்தி யாகும்
கலகலத்த திந்தமெல்லாம் இறுகிப் போகும்
எண்ணடா கோடான கோடி பேர்க
ளிதையறிந்து குடிமக்கத் திகைத்து நின்றார்
சொன்னடா சொன்னதனைக் கானை வென்றோர்
பூட்டுகிற வகையதனைப் புகலக் கேளே
(௧௮)

———— o ————

காந்த செந்தூரம்

கேளடா காந்தசத்து நாக மொன்று
கொடியான தங்கமொன்று ரசந்தா னொன்று
காளடா மூன்றுமொன்றாய் உருக்கும் போது
நல்லதொரு நாகமது மீன்று போடு
காலடா புகையமர்ந்து கட்டிப் போகும்
கருணையுட னின்றுருகி மணியு மாகும்
ஆளடா யிந்திடைக்கி கெந்தி கூட்டி
அப்பனே நாலுவிதை வைப்புஞ் சேரே.
(௧௯)

சேரப்பா பொடித்தல்லோ குப்பியிற் றுக்கி
திறமாக வாலுகையில் நீற்றிக் கொண்டு
நேரப்பா நவலோகம் நூற்றுக் கொன்று
கிட்டவே பன்னிரண்டு மாதத்து மாகும்
தேரப்பா மயங்காதே பொன்னைப் பார்த்து
தீர்க்கமுடன் குளிக்கல்லிட்/டுரைத்தி/டாயே
னிரப்பா துரிசெத்து சமனுய்ச் சேர்த்து
நீற்றியதைப் பதமாக வெடுத்துப் பாரே.
(20)

பூநாகச் சத்து

பாரப்பா பூநாகச் சத்துச் சொல்வேன்
பதிவாகப் பூமிவேர் தன்னை வாங்கி
சேரப்பா உலர்த்தி நன்றாய்ப் பொடியே செய்து
செயமான சாரமது விடைகளஞ்சி
காரப்பா சவ்வீர மிடைகளஞ்சி
காட்டான வெங்கார மிடைகளஞ்சி
தேரப்பா யிதுவெல்லாஞ் செயநீர் தன்னால்
செம்மையுட னரைத்துவட்டு குகையில் வையே (உக)

வைத்து நன்றாய் சீல்விட்டு உருக்கிப் பாரு
மார்க்கமுடன் மணிமணியாய் சத்து வீழும்
மைத்தல்லோ மணியெல்லா முருக்கிப் பார்க்க
மகத்தான வயிரம்போற் பளபளாக்கும்
கைத்ததொரு பூநாகச் சத்தின் றனையும்
கருணையுடன் காசிடைதான் உருக்கி மைந்தா
நைத்ததொரு நாகமதின் றிடையே போட்டு
நல்லதொரு விரண்டொன்றாய் புகையும் பாரு (௨௨)

பாரப்பா யிப்படியே உருக்கிப் பார்க்க
பதிவாக வோரிடைதா னைக மட்டும்
சாரப்பா கட்டியதோர் நாக மொன்று
சங்கையுள்ள சூதமொன்று தங்க மொன்று
சேரப்பா உருக்கியதை வாங்கிக் கொண்டு
நேராகக் கெந்தகமும் கூட்டி மைந்தா
சேரப்பா பொடியாக்கி குப்பிக் கேத்தி
செம்மையுடன் வாலுகையி லேத்தி டாயே (உங)

ஏத்தியல்லோ தீயெரித்து செந்தி ரித்தால்
யென்னசொல்வேன் நவலோக நாற்றுக் கொன்று
சாத்தியல்லோ தானுருக்கி பார்த்தால் மைந்தா
சங்கையுடன் பதினாறு மாதத்துங் காணும்
கூற்றனுமே க் கிரண்பதற்கு அஞ்சு வான்பார்
திருவருளால் பராசக்தி பாதந் தன்னை
போற்றியே ஆரைந்துப் பார்த்தா லுந்தான்
புண்ணியர்க்கு ரசவாதப் புகழுண் டாமே (உச)

முற்றிற்று